CHENNAI KONGU NANBARGAL MALAR

# சென்னை கொங்கு நண்பர்கள் மலர்

ஏர் 11 • உழவு 03 • திருவள்ளுர் ஆண்டு 2057 • விலை ரூ.20/- • மார்ச் 2026 • (மாசி-பங்குனி)



## மாண்புமிகு மகளிர்

மணிமகுடம் சூடும் மகளிர் சிறப்பிதழ் !




AMMA NAANA




**Mr. V. R. Govindasamy**
**Mrs. G. Rajam**
Founders
**Ph: +91 94443 99199**

---

**M. Senthilraj**
CEO
**Ph: +91 94443 99998**

---

# ECR
# MRC NAGAR
# MADURAVAYOL

---

**No.100, Chamiers Road,**
**Teynampet,**
**Chennai - 600 018.**

**+91 98843 09993**

**ammanaana.staff@gmail.com**

# “நாம் ஓட்டுப்போடுவோம் நல்லாட்சி உருவாக்குவோம்!”




ஓட்டு போடுவது உங்கள் அடிப்படை உரிமை அதை பயன்படுத்துவது உங்கள் கடமை.

தேர்தல் நாளில் தவறாமல் சென்று ஓட்டு போடுங்கள் உங்கள் குரல் வெளிப்படட்டும்.

ஓட்டு போடாமல் இருப்பது மக்களாட்சியில் ஒரு வாய்ப்பை இழப்பது ஆகும். உங்கள் உரிமையை இழக்காதீர்கள்.


**Published & Edited by:**
**The President on behalf of Kongu Nanbargal Sangam, Velli Vizha Illam, No. 34 Srinivasa Perumal Sannathi 1st Street, Royapettah, Chennai - 600014.**
**Printed by:**
**M.Shaik Dawood, Dawood Graphics,**
**No. 63, Muthu Mudali Street, Royapettah, Chennai - 600 014.**


## கொங்கு நண்பர்கள் சங்கம், சென்னை

### நிர்வாகக்குழு உறுப்பினர்கள்

**தலைவர்**
**வீ.க.செல்வக்குமார்**
Chennal Mettex Lab Pvt. Ltd.
98410 78949

**செயலாளர்**
**M.அமராபதி**
Jairram Hi-Tech Products
94440 60885

**பொருளாளர்**
**C.கொங்குவேள்** Dharani Developers P.Ltd., (PGP Group)
98408 90034

**துணைத் தலைவர்கள்**

**R.சண்முகவேல்**
Sunbright Designers Pvt. Ltd.,
98410 22960

**V.P.வீரப்பன்**
Sengam Transport
94432 66610

**இணைச்செயலாளர்கள்**

**C.அரவிந்தன்**
K Labs Technology & Solutions Pvt. Ltd.,
98419 23808

**P.ரவி**
SKV Educational Institution's
9842754245

### செயற்குழு உறுப்பினர்கள்

**அருள் பொன்னுசாமி**
Ponmani Engineers Pvt. Ltd.,
9884022266

**V.R.பாலசுப்பிரமணியன்**
Advocate & Labour Law Consultant
94444 04593

**S.அன்பழகன்**
BISMARCK Business Network Advisor (India, UAE, Hong Kong)
98403 09394

**K.ஜெகதீசன்**
Unitech Gorup
91767 17131

**S.சீனிவாசன்**
Prim Drugs & Pharmaceuticals I.Pvt., Ltd.,
94440 18021

**N.P.இசையழகன்**
Ms. Esal & Co. Chartered Acou
94444 04595

**R.கந்தகார்த்திக்**
RKG & Sons Associates
90036 90695

**கதிர்வேல் கணபதியப்பன்**
ISSM Business School
98840 22255

**K.G.ஜோதீஷ்குமார்**
Athiappa Chemicals (P). Ltd.,
9442488000

**A.நடராஜன்**
NU-Tech Components
9789973123

**S.ஜெகன் நாதன்**
Sri Krishna Power Loom Society
94437 42696

**K.நித்தியானந்தன்**
Sri Devkrish Group
98422 29503

**விசா M.சன்முகம்**
Sri Ambika Nets
9944933311

**S.குணசேகர்**
BRT Spinner Pvt. Ltd.,
9366635141

**T.P.நடராஜன்**
V.M.D. Groups, Chithode
9842766789

**D.மாணிக்கவாசகம் சிவப்பிரகாசம்**
RAWS N-Greens Health Care (P). Ltd.,
9443745879

**பரமேஸ்வரி சின்னசாமி**
P&C Projects (P) Ltd.,
9444070033

Dr.**சண்முகப்பிரியா** MBBS
AGS Complex & Ware Houses,
7824880456


பதிப்பாளர்
கொங்கு நண்பர்கள் சங்கம்,
வெள்ளி விழா இல்லம்,
எண். 34 ஸ்ரீநிவாச பெருமாள் சன்னதி 1-வது தெரு,
ராயப்பேட்டை, சென்னை - 600014.


ஆசிரியர் குறிப்பு
வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / சென்னை கொங்கு நண்பர்கள் மலர் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச் சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை. நேர்காணல்களும், சிறப்புக் கட்டுரையாளரின் கருத்துகளும் அவரவர்களின் சொந்தக் கருத்துகளே.

# தலைவர் மடல்

அன்புடையீர், வணக்கம்! நலம். நலமே விழைகிறேன்.

புவிப்பெரியான் ஜார்ஜ் பெர்னாட் ஷாவுரைத்த
பொன்மொழியைக் கேளுங்கள் நாட்டில் உள்ளீர்!
'உவந்தொருவன் வாழ்க்கை சரியாய் நடத்த
உதவுபவள் பெரும்பாலும் மனைவி ஆவாள்.
அவளாலே மணவாளன் ஒழுங்கு பெற்றான்"!
அவளாலே மணவாளன் சுத்தி பெற்றான்"!
குவியுமெழிற் பெண்களுக்கே ஊறு செய்யும்
குள்ளர்களே, கேட்டீரோ ஷாவின் பேச்சை!
அவனியிலே ஒருவனுக்கு மனைவி யின்றேல்
அவனடையும் தீமையை யார் அறியக்கூடும்?
கவலையுற ஆடவர்கள் நாளும் செய்யும்
கணக்கற்ற ஊழல்களை யெல்லாம் அந்த
நவையற்ற பெண்களன்றோ விலக்குகின்றார்!
நானிலத்தில் மார்தட்டும் ஆட வர்கள்
சுவைவாழ்விற் கடைத்தேறத் தக்க தான
சூக்ஷுமமும் பெண்களிடம் அமைந்த தன்றோ!
கல்வியில்லை உரிமையில்லை பெண்களுக்குக்
கடைத்தேற வழியின்றி விழிக் கின்றார்கள்!
புல்லென்றே நினைக்கின்றீர் மனைவி மாரைப்
புருஷர்களின் உபயோகம் பெரிதென் கின்றீர்!
வல்லவன் பேரறிஞன்ஷா வார்த்தை கேட்டீர்
மனோபாவம் இனியேனும் திருந்த வேண்டும்.
இல்லை யெனில் எது செயலாம்? ஆண் பெண் என்ற
இரண்டுருளை யால் நடக்கும் இன்பவாழ்க்கை!

பேரறிஞர் பெர்னாட்ஷாவின் பொன்மொழிகளை பாடலாக வடித்திருக்கிறார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்! இன்று பாரதிதாசனும் பெர்னாட்ஷாவும் இருந்திருந்தால் அக மிக மகிழ்ந்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.


சற்று எண்ணிப் பாருங்கள் ஐம்பது அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் நமது சமுதாயத்தில் எத்தனை இளம் தாய்மார்கள்,

சகோதரிகள் வெள்ளை புடவை உடுத்தி இருக்கும் கொடுமையான நிலையை பார்த்திருப்போம். இன்று நமது சமுதாயத்தில் கைம்பெண்கள் இந்நிலை மாறி, மறுமணம் புரிகின்ற நிலைகளும் மேலோங்கி இந்தப் புரட்சி ஏற்படுவதற்கு நம் சமுதாயத்திலும் பெர்னாட்ஷாக்கள் போன்ற பெரியார்கள் ஏற்படுத்திய விழிப்புணர்வுகள் தான் காரணம் என்றால் அது மிகையாகாது! அதிலும் குறிப்பாக நமது சமுதாயத்தில் கல்வி அறிவு பெற்ற பெண்கள் வரக் காரணமாக இருந்தது நமது சமுதாயப் பெரியார்கள் உருவாக்கிய மகளிர் கல்வி நிறுவனங்கள் பெரும் பங்காற்றியது என்பது குறிப்பிடத்தக்கது.

அதன் பயன் இன்று மகளிர், தொழில் முனைவோர்களாக, அரசுப் பணிகளில், கணினித் துறைகளில் உயர் அலுவலர்களாக, உச்சம் தொட்டு இருக்கிறார்கள். உழவுத் தொழிலும் நாம் உன்னத நிலையை அடைய கடும் உழைப்பை, வியர்வையை சிந்தியிருக்கிறார்கள் நமது சமுதாய மகளிர்! அத்தகையோரைப் பாராட்டிப் போற்ற வேண்டியது நம் கடமை அல்லவா! அதன் காரணமாகத்தான் மார்ச் எட்டாம் நாள் உலக அளவில் மகளிர் தினமாக கொண்டாடும் வேளையில் அதில் நாமும் பங்கேற்கும் விதமாக நமது சமுதாயத்தின் சாதனைப் பெண்மணிகள் சிலரைப் பற்றிய கட்டுரைகளை மகளிர் மாத சிறப்பிதழாக வெளியிட்டுள்ளோம்.

சாத்தி ரங்கள் பலபல கற்பராம்!
  சவுரி யங்கள் பலபல செய்வராம்;
மூத்த பொய்ம்மைகள் யாவும் அழிப்பராம்;
  மூடக் கட்டுகள் யாவுந் தகர்ப்பராம்;
காத்து மானிடர் செய்கை யனைத்தையும்
  கடவு ளர்க்கினி தாகச் சமைப்பராம்;
ஏத்தி ஆண்மக்கள் போற்றிட வாழ்வராம்;
  இளைய நங்கையின் எண்ணங்கள் கேட்டிரோ!

என்ற மகாகவி பாரதியின் வரிகள் இன்று மெய்ப்பிக்கப்படுவதை கண்கூடாகக் காண்கின்றோம் அல்லவா?



அனைவருக்கும் இனிய சித்திரைத் திருநாள் புத்தாண்டு நல்வாழ்த்துகள்!

நன்றி!

அன்புடன்

வீ.க.செல்வக்குமார்
தலைவர்

# செயலாளர் கடிதம்

கொங்கு சொந்தங்களுக்கு வணக்கம்!!

மீண்டும் இம்மடல் வாயிலாக உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்!

இந்த இதழ் மகளிர் தின சிறப்பிதழாக உங்கள் கரங்களில் தவழ்கிறது!! இப்புதிய முயற்சி நமது சங்கத்தின் இணைச் செயலாளர் சி.அரவிந்தன் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது என்பதை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

14.03.2026 அன்று கொங்கு இனக்காவலர் அமரர் கோவை செழியன் ஐயா அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு நமது சங்கத்தில் அவரது திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

வரும் ஏப்ரல் 23 ம் தேதி தமிழகத்திற்கு சட்டமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தருணத்தில் டாக்டர் சுப்பராயன் அவர்களை நினைவு கூரக் கடமைப் பட்டுள்ளேன்.

டாக்டர் சுப்பராயன் அவர்கள் சென்னை மாகாணத்தின் மூன்றாவது முதலமைச்சர் .கொங்கு சமுதாயத்தைச் சார்ந்த இவர் இப்பதவி வகித்த முதல் தமிழர் என்பது நம் அனைவருக்கும் பெருமை! திருச்செங்கோடு தொகுதியிலிருந்து ஏழு முறை வெற்றி பெற்றவர்.பம்பாய் மாகாணம் குஜராத் ,மகாராஷ்டிரா என்று பிரிக்கப்பட்டபின் மகாராஷ்டிரா மாநிலத்தின் முதல் ஆளுநராகப் பொறுப்பேற்றவர்!

வகுப்பு வாரி பிரதிநிதித்துவத்தை அரசுத் துறைகளில் முதன்முதலாக அறிமுகப் படுத்திய பெருமையும் டாக்டர் சுப்பராயன் அவர்களையே சாரும்! 1928ல் சேலத்தில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் வ.உ.சிதம்பரனார் அவர்கள், “சுப்பராயன் அவர்கள் தலைமையிலான சுயேச்சை அமைச்சரவை தான் வகுப்பு வாரி இட ஒதுக்கீட்டிற்கு சட்ட ரீதியான உத்தரவாதத்தை ஏற்படுத்தியது” என்று குறிப்பிட்டுள்ளார்.

அவரது குடும்பத்தினர் தலைமுறைகளாகப் பொது வாழ்வில் பங்களித்தவர்கள்!

மதுரை,திருநெல்வேலி, இராமநாதபுரம் உள்ளடக்கிய மத்திய சட்டமன்ற தொகுதிக்குப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டவர் சுப்பராயன் அவர்களது மனைவி திருமதி இராதா பாய் சுப்பராயன் அவர்கள்!அவர் இந்திய நாடாளுமன்ற வரலாற்றில் முதல் பெண்உறுப்பினராகப் பலத்த கரவொலிக்கு நடுவில் பங்கேற்ற பெருமைக்குரியவர்!அதே போல் கர்ம வீரர் காமராஜர் அவர்கள் விருப்பத்திற்கிணங்க நாடாளுமன்ற மேலவைத்தேர்தலில் வெற்றி பெற்ற டாக்டர் சுப்பராயனும் ,இந்தியக் கம்யூனிஸ்ட் சார்பில் வென்ற அவரது மகள் பார்வதி கிருஷ்ணனும் ஒரே கால கட்டத்தில்,ஒரே அவையில் உறுப்பினர்களாக இருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது. மகளிர் தின சிறப்பிதழில் இவர்களை நினைவு கூர்வது பொருத்தமாக இருக்கும் என நினைக்கிறேன்.



கடந்த 23/2/21 அன்று சட்ட மன்ற வளாகத்தில் டாக்டர் சுப்பராயன் அவர்களின் திருவுருவப் படம் திறந்து வைக்கப்பட்டது.

இத்தகைய சான்றோரைப் பற்றி இத்தலைமுறையினருக்கு எடுத்துரைப்பது நமது தலையாய கடமையாகும்.

வரும் தேர்தலில் வாக்களிப்பது நமது ஒவ்வொருவருடைய தலையாய கடமையாகும் ... நல்லவர்கள் ஆள, நல்லாட்சி மலர, சிந்தித்து வாக்களிப்போம் ...

மீண்டும் சந்திப்போம்..

நன்றி வணக்கம்,

**எம்.அமராபதி**
செயலாளர்



# கொங்கு நண்பர்கள் சங்கம்

## சென்னை

(பதிவு எண் : 282/76)



### தங்கும் விடுதி




"தீரன் சின்னமலை மாளிகை"
நெ,72, பீட்டர்ஸ் ரோடு
இராயப்பேட்டை,
சென்னை-600 014.
chennaikongu@gmail.com
Ph : 044 - 4266 8046
Cell : 93815 45451

AC Rooms | Double Cot
TV | CCTV | Wifi | Safety Secure
Bathroom Heater | Water Bottle
Towel | Water Dispenser

**Discount for Members**

### கொங்கு மகளிர் விடுதி

Sharing Room | Double Cot
CCTV | Wifi | Safety Secure
Bathroom Heater | Water Dispenser
Washing Machine | Two Wheeler Parking

"கொங்கு நாடு இல்லம்"
27, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 14
chennaikongu@gmail.com
Ph : 044 - 4266 8046, Cell : 63839 85919



### கொங்கு மாணவர் விடுதி

AC Rooms Available
Double Cot
CCTV | Wifi
Safety Secure
Bathroom Heater
Water Dispenser
Washing Machine
Two Wheeler Parking




"வெள்ளி விழா இல்லம்"
34, சீனிவாசப் பெருமாள்
சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 14.
chennaikongu@gmail.com
044 - 4351 0460 | Cell : 63839 85919

## தங்கள் விளம்பரங்களுக்கு...

நமது சங்கத்தின் இந்த புத்தகத்தில் விளம்பரம் செய்து சங்கத்தின் கரத்தை வலுப்படுத்துவோம்.

இந்த புத்தகம் 4 ஆயிரம் பிரதிகளுடன் பல்வேறு மக்களை பல்வேறு பகுதிகளில் சென்றடைகிறது.

| | |
|---|---|
| Full page color | 10,000 |
| Front wrapper | 20,000 |
| Front inner | 15,000 |
| Back inner | 15,000 |
| Matrimony full page | 10,000 |

# கீரம்பூர் அருள்மிகு எட்டுக்கை அம்மன் திருக்கோயில்

## சித்திரை பொங்கல் தேர் திருவிழா



***நிகழ்ச்சி நிரல்***

28.04.2026 செவ்வாய் அன்று காப்பு கட்டுதல் நிகழ்ச்சியுடன் தொடங்கி 08.05.2026 வெள்ளி வரை நடைபெறுகிறது. விழா நாட்களில் தினமும் அம்மனுக்கு சிறப்பு பூஜையும் திருவீதி உலாவும் நடைபெறும்.

05.05.2026 செவ்வாய் மாலை அம்மை அழைப்பு நடைபெறும். 07.05.2026 வியாழன் காலை 9.00 மணிக்கு பொங்கல் வைத்தல் மற்றும் பெரிய தேர் திருக்கோயிலை சுற்றி வலம் வருதல் நடைபெறும்

**அனைவரும் தவறாது கலந்து கொண்டு எட்டுக்கை அம்மன் அருளைப் பெற அன்புடன் அழைக்கப்படுகிறீர்கள்.**

**அறங்காவலர் குழு மற்றும் செம்பூத்தான் குலம் பண்ணைக்குலம் குடிப்பாட்டு மக்கள்**

# கொங்கு மங்களம் குழு தொழிற்சாலை சுற்றுப்பயணம் நிகழ்ச்சி நிரல்

## “ஒரு நாள் கற்றல் எதிர்காலத்திற்கு ஒரு படி”



கொங்கு மங்களம் குழுவின் சார்பில், 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை மாணவர்களுக்கான தொழிற்சாலை சுற்றுப்பயணம் (Industrial Visit) ஏப்ரல் 11ஆம் தேதி காலை 9:00 மணி முதல் மதியம் 2:00 மணி வரை நடைபெற உள்ளது.

இந்த பயணத்தின் மூலம் மாணவர்கள் தொழிற்சாலைகள், இயந்திரங்கள் மற்றும் தொழில்நுட்பங்களை நேரில் அறிந்து கொள்ள ஒரு நல்ல வாய்ப்பு கிடைக்கும்.

இடங்கள் குறைவாக உள்ளதால் முன்பதிவு அவசியம்.

பதிவு செய்ய தொடர்பு கொள்ளவும்:

94434 43500.

SUN-X CONCRETE

# SUN-X CONCRETE INDIA PVT LTD

C H E N N A I



**OUR PRODUCTS**

**READY MIX CONCRETE | SOLID BLOCKS | AAC BLOCKS**
**AGGREGATE | FLYASH BRICKS**

"Ramaniyam Ocean Isha", No11, 6th Floor, Old Mahabalipuram Road,Okkiyam Thoraipakkam, Chennai - 600 096.

Call : 9003070704 | 9940400050 Email : sales@sunxconcrete.org

w w w . s u n x c o n c r e t e . o r g

# இறுதி மாதவிடாய் சுகமா? சுமையா?



**பத்மஸ்ரீ டாக்டர் வி.எஸ்.நடராஜன்**
முதியோர் நல மருத்துவர். சென்னை

மாதவிடாய் நிற்பது என்பது ஒரு நோயல்ல. அது இயற்கையின் நியதி. அதைச் சரியாகப் புரிந்துகொண்டால் அக்காலம் மிகவும் தொல்லையில்லாத காலம் என்றே கூறலாம்.

ஒரு பெண்ணின் வாழ்க்கைப் பருவத்தை மூன்று காலகட்டங்களாகப் பிரிக்கலாம். முதல் கட்டம், பூப்பெய்தும் வரை. அடுத்தது, குழந்தைப்பேறு அடையும் பருவம். இறுதி மாதவிடாய்க் காலம், கடைசிப் பருவம் ஆகும். மாதவிடாய் நிற்கும் பருவத்தை மூன்று காலங்களாகப் பிரிக்கலாம்.

★ இறுதி மாதவிடாய் நிற்பதற்கு முந்தைய காலம்

★ இறுதி மாதவிடாய்க் காலம்

★ இறுதி மாதவிடாய்க்குப் பிறகு வரும் காலம்

### இறுதி மாதவிடாய் நிற்பதற்கு முந்தைய காலம்

மாதவிடாய் நிற்பதற்கு சுமார் 3-4 வருடங்களுக்கு முன்னரே இப்பருவம் ஆரம்பித்து விடுகிறது. இக்காலத்தில் பெண்ணின் சினைப்பையிலிருந்து வெளிவரும் ஈஸ்ட்ரோஜன் ஹார்மோன் குறைகிறது, அதனால் சரிவர மாதவிடாய் ஏற்படுவதில்லை. அதாவது முகம் மற்றும் உடம்பிலுள்ள பல்வேறு பாகங்கள் திடீர் திடீரென்று சிவந்து, சூடு அடைந்துவிடும். இதைத் தவிர தூக்கமின்மை, தலைவலி, களைப்பு, படபடப்பு மற்றும் மயக்கம் போன்ற பல தொல்லைகள் தோன்றுவதுண்டு.

### இறுதி மாதவிடாய்க் காலம்

மாதவிடாய் தொடர்ந்து 12 மாதங்களுக்கு ஏற்படாமல் இருந்தால் அவர்கள் இப்பருவத்தை அடைந்து விட்டார்கள் என்று எண்ணலாம். சராசரியாக இப்பருவம் 45 முதல் 50 வயது வரையில் ஏற்படலாம். ஆனால் சமீப காலத்தில் பலருக்கு தங்கள் வாழ்க்கை முறையில் ஏற்படும் மாற்றங்களினால் 40 வயதிலேயே மாதவிடாய் நின்று விடுகிறது.

### அறிகுறிகள்

முதலில் மாதவிடாய், விட்டுவிட்டு வருதல். சில நேரங்களில் மிக அதிகமாகவும் வரலாம். உடல் சிவத்தல், வியர்த்துக் கொட்டுதல் இவைகளும் சேர்ந்து வரும். சுமார் 70 சதவிகிதப் பெண்களுக்கு இத்தொல்லைகள் வரலாம். சிலருக்கு இத்தொல்லைகள் 5 ஆண்டுகள் கூட நீடிக்கலாம். தூக்கமும் வெகுவாகப் பாதிக்கப்படும். இதனால் பகலில் மிகுதியான களைப்பு ஏற்படும். பிறப்புறுப்புகள் மற்றும் நீர்த்தாரையில் அரிப்பு, வறட்சி, நீர்க்கசிவு, சிறுநீர்க் கசிவு, ரத்தக்கட்டி போன்ற தொல்லைகள் ஏற்படலாம். மேற்கண்ட உறுப்புகளில் கிருமிகள் மூலம் நோய்த்தொற்றும் ஏற்படலாம்.

### இறுதி மாதவிடாய்க்குப் பிறகு வரும் காலம்

மாதவிடாய் நின்று 5-10 வருடங்கள் கழித்து இப்பருவம் ஆரம்பித்துவிடும். இக்காலத்தில் எலும்பு பலவீனம் அடைதல் பிறப்புறுப்புகளில்



ரத்தக்கசிவு ஏற்படுதல், கர்ப்பப்பை கீழே இறங்குதல் மற்றும் மார்பகம், கர்ப்பப்பையில் புற்று நோய் போன்ற தொல்லைகள் வரலாம். இவை அனைத்து விடாய் நின்ற அனைத்துப் பெண்களுக்கும் வருவதில்லை. ஒரு சிலருக்கே ஏற்படுகிறது மாதவிடாய் முழுமையாக நின்று சுமார் ஒரு வருடம் கழித்துப் பிறப்புறுப்புகளில் ரத்தக்கசிவு ஏற்படலாம். இதற்குப் பிறப்புறுப்பு சுருங்குவது பிறப்புறுப்புகளில் கட்டி, கர்ப்பப்பை கீழே இறங்குதல் மற்று கர்ப்பப்பையில் புற்றுநோய் போன்றவையே காரணங்களாக இருக்கலாம்.

### சிகிச்சை முறைகள்

மாதவிடாய் நிறகும் பருவத்தில் உண்டாகும் தொல்லைகளுக்குப் பொதுவாகச் சிகிச்சை ஏதும் அதிகமானோருக்குத் தேவைப்படுவதில்லை.

★ யோகா, தியானம், மசாஜ் மற்றும் தவறாமல் செய்யும் உடற்பயிற்சி மூலமே பல தொல்லைகள் குறைந்துவிடும்

★ எலும்பு பலவீனம் அடைவதைத் தடுக்க, சுண்ணாம்புச் சத்து அதிகமுள்ள உணவை உட்கொள்ள வேண்டும். வைட்டமின் டி அதிகம் கிடைக்க குறைந்தபட்சம் காலையிலும் மாலையிலும் 30 நிமிடங்களாவது வெயிலில் நிற்க வேண்டும். வைட்டமின் டி அதிகமுள்ள பால், மீன், மீன் எண்ணெய் மற்றும் கல்லீரல் போன்றவற்றை உணவில் அதிகம் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

★ உடல் பருமனாக உள்ளவர்கள் உணவுப் பத்தியம் மற்றும் உடற்பயிற்சியைக் கடைப்பிடித்து வரவேண்டும்.

★ ஒருசில பெண்களுக்கு மனநல மருத்துவரின் உதவியும் தேவைப்படலாம்.

### மருத்துவச் சிகிச்சை

★ சுண்ணாம்புச் சத்து மற்றும் வைட்டமின் டி மாத்திரையைத் தினமும் எடுத்துக்கொள்ளலாம்.

★ பிறப்புறுப்புகளில் வறட்சி உள்ள பெண்களுக்கு ஈஸ்ட்ரோஜன் களிம்பை உள்ளே தடவலாம்.

★ மன அமைதியைக் கொடுக்கும் மாத்திரை நல்ல தூக்கத்தைக் கொடுக்கும்.

★ மனம் சார்ந்த தொல்லைகளுக்கு மனச்சோர்வுக்கான மாத்திரையைக் கொடுக்கலாம்.

★ புற்றுநோய் மற்றும் கர்ப்பப்பை கீழே இறங்குதலுக்கு, தேவைப்பட்டால் அறுவை சிகிச்சை செய்யலாம்.

### ஹார்மோன் சிகிச்சை

குறைந்த அளவில் ஈஸ்ட்ரோஜன் ஹார்மோன் கொடுப்பதன் மூலம் உடல் மற்றும் மனம் சார்ந்ததொல்லைகள் குறையும், எலும்பு உறுதி பெறும். இதய நோய்கள் வருவதும் குறைய வாய்ப்புண்டு. ஆனால் இச்சிகிச்சை முறையினால் பல தீய விளைவுகளும் ஏற்படலாம்.

### இறுதி மாதவிடாய்ப் பிரச்னைகளை எதிர்கொள்வது எப்படி?

★ கால்சியம் குறைபாட்டைத் தவிர்க்க சத்துள்ள உணவு அவசியம். புரதம் நிறைந்த உணவுகளை எடுத்துக்கொள்வது நல்லது. முட்டையின் வெள்ளைக்கருவைச் சாப்பிடலாம். தேவைப்படுவோர் கால்சியம் மற்றும் வைட்டமின் மாத்திரை எடுத்துக்கொள்ளலாம்.

★ மார்பு வலி, மாரடைப்பு போன்ற இதய பிரச்னைகள் வரலாம்.

★ இவற்றைத் தவிர்க்க விறுவிறுப்பான நடைப்பயிற்சி அல்லது உடற்பயிற்சி அவசியம்.

★ இறுதி மாதவிடாய் சமயத்தில் பல பெண்களுக்கு உடல் எடை அதிகரிப்பது பெரிய பிரச்னையாக இருக்கிறது. உணவு மற்றும் உடற்பயிற்சி மட்டுமே இதைத் தடுக்க உதவும். சமச்சீரான சத்தான உணவு முக்கியம்.

★ அடிக்கடி மனநிலை மாற்றங்கள், மனச்சோர்வு, தூக்கமின்மை ஆகிய தொல்லைகள் ஏற்படலாம். உடற்பயிற்சி, யோகா, தியானம், மூச்சுப்பயிற்சி, ஆரோக்கியமான உணவுப் பழக்கம் ஆகியவையே இந்தத் தொல்லை களைப் போக்க சிறந்த வழி.

★ சிலருக்கு ஹார்மோன் குறைபாட்டால் அடிக்கடி சிறு நீர்





வெளியேறும் தொல்லை ஏற்படலாம். ஈஸ்ட்ரோஜன் ஹார்மோன் களிம்பைப் பிறப்புறுப்புகளில் தடவி வந்தால் தீர்வு கிடைக்கும்.

இறுதி மாதவிடாய் என்பது பெண்களுக்கு இயற்கையாக நடக்கும் ஒரு நிகழ்வே.


மாதவிடாய் நிற்கும் பருவத்தில் தோன்றும் ஒருசில தொல்லைகளுக்கு நடுவே சில இனிப்பான செய்திகளும் உண்டு.அவை:

★ மாதந்தோறும் ஏற்படும் மாதவிடாயிலிருந்து நிரந்தர விடுதலை

★ கோவில் மற்றும் திருமணம் போன்ற விழாக்களுக்கு எந்தத் தயக்கமின்றியும் செல்லலாம்.

★ கர்ப்பம் ஏற்படுமோ என்ற பயத்திலிருந்தும் விடுதலை

மாதவிடாய் நிற்கும் பருவ காலங்களில் ஏற்படும் பிரச்னைகளுக்கு மருந்துகள் மட்டுமே தீர்வு தராது. குடும்பத்தினர் காட்டும் உண்மையான அன்பும் அரவணைப்புமே மருந்தைவிட முக்கியமாகத் தேவை. இதைக்குடும்பத்தினர் தாராளமாகக்கொடுக்க முன்வந்தால் இறுதி மாதவிடாய் என்பது சுமையல்ல... சுகமான பருவமே!



**தலைமைப்பண்புகள் : 53 / 100**

வானளவு இலட்சியமும்
வற்றாத நம்பிக்கையும்
கொண்டவனே தலைவன்!

-சிந்தனைக் கவிஞர்
கவிதாசன்

## வாழ்த்துகிறோம்



காளியப்ப கவுண்டன் புதூர் முன்னோடி விவசாயியும் தூரன் கூட்டமும் ஆன திரு. உதயகிரி காசியப்பன் அவர்கள் நியூ சிலாந்து நாட்டில் நடை பெறும் 70 வயதுக்கு மேற்பட்டோருக்கான கிரிகெட் உலக கோப்பை போட்டியில் விளையாட இந்திய அணியின் சார்பில் தேர்வாகி சென்றுள்ளார்.

கவிதை...



# யாதுமாகி நின்றாய் தாயே

முருங்கையின் பயனாய்,
தென்னையின ஈகையாய்
பனையின் கொடை யாய்
பசுவின் வழங்கு தலாய்
மாரியின் சாரலாய் நலம்
நல்கும் படைப்புகள் பாரினில்
பல உண்டு !

இவை அனைத்தையும்
தன்னகத்தே கொண்டவள்
தாயன்றோ!

யாதுமாகி நிற்பவளும்
தன்னின் யாவும் ஈதல்
பொருட்டே என்பதாய்
இருப்பவளும் அவளே!
ஒரு சொல் பல பொருள்
இலக்கணத்தில் ; ஒரு
பொருள் பல பயன்
நித்தியத்தில் !

அன்னையின் சேலை
பகரும் பல சான்று !

அன்னையின் மடியே
முதல் மெத்தை ;
சேலையின் தலைப்பே
முதல் விரிப்பு.. அவளின்
சேலை முதல் தொட்டில்;
வெயில் மழைக்கு முதல்
குடையாம். உறங்கும்
சிசுவின் மலர் கரங்கள்
தலைப்பை பிடித்தே
கண் உறங்கும்,,!

தன் பலம் அறியா அனுமானாய்
தன் தியாகம். உணரா
அன்னையினும் உளரோ
உயர்ந்தோர் இப்புவியில்?

ஆதியும் அந்தமும்
அவள் திருப்பாதம்!

" வாழி. நலம் சூழ !"

கவிதை ஆக்கம்:
கவிஞர் கலாப்ரியன்(பூபதி)


சிறார் தொடர்கதை

எழுதியவர்: பெ.தூரன்

# சங்ககிரிக் கோட்டையின் மர்மம்

## நன்கே முடிந்தது!

16



“அந்த இரண்டு இளைஞர்களும், பெண்ணும் எங்கே?” என்று சப்-இன்ஸ்பெக்டர் அதட்டிக் கேட்டார். அந்த நால்வரும் திருதிரு என்று விழித்துக் கொண்டு தங்களுக்கு அவர்களைப் பற்றி ஒன்றுமே தெரியாது என்று சாதித்தார்கள்.

ஒருவருமே உண்மையைச் சொல்லவில்லை. ஆனால் ஜின்கா இருட்டறைச் சிறைக்கூடம் இருக்குமிடத்தையும் அதற்குள்ளே அவர்கள் இருக்கிறார்கள் என்பதையும் பலவிதமான சத்தங்களைச் செய்து போலீஸ்காரர்களுக்கு உணர்த்திவிட்டது.

உடனே போலீஸ்காரர்கள் சிறைக்கூடத்தின் மேலே இருந்த மூடியைத் தூக்கினார்கள். உள்ளே எந்த விதமான சத்தமும் கேட்கவில்லை. ஆனால் ஜின்கா உள்ளே குனிந்து பார்த்து அவர்கள் இங்கு இருப்பதாகத் தெரியப்படுத்தியது.

சப்-இன்ஸ்பெக்டர் தாம் கொண்டு வந்திருந்த டார்ச் விளக்கை உள்ளே செலுத்திப் பார்த்தார். மூவரும் உயிரே இல்லாதது போலப் படுத்துக் கிடந்தார்கள். நல்ல வேளையாக நூல் ஏணி கொண்டுவரும்படி தங்கமணி எழுதியிருந்தான்.

உள்ளேயிருந்த ஒரு கொக்கியில் மாட்டி போலீஸ் ஜவான் ஒருவன் உள்ளே வேகமாக இறங்கினான். மூவரையும் ஒவ்வொருவராக மேலே கொண்டு வந்து மற்ற போலீஸ்காரர்கள் வசம் கொடுத்தான்.

உள்ளே நல்ல காற்று இல்லாததால் அவர்கள் மயங்கிக் கிடந்தார்கள். வெளியில் கொண்டு வந்து அவர்களைப் போட்டுவிட்டுப் பக்கத்திலிருந்த சுனையிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து முகத்தில் தெளித்தார்கள்.

இவ்வாறு முதலுதவி செய்ததால் அவர்கள் மூவரும் உயிர் பிழைத்தார்கள்.



# 17 பாட்டியிடமிருந்து பிரிவு!



அந்த நான்கு முரடர்களுக்கும் புதையலைத் திருட முயன்றதற்கும், மூவரையும் கொலை செய்ய முயற்சி செய்ததற்கும் பல ஆண்டு சிறைத் தண்டனை கிடைக்கும் என்பது நிச்சயம். தங்கமணியையும், சுந்தரத்தையும், கண்ணகியையும் போலீஸார் மிகவும் பாராட்டினார்கள். அவர்கள் முயற்சியால்தான் திப்புசுல்தான் காலத்துத் தங்கக் காசுகள் கிடைத்தன. ஒவ்வொருவருக்கும் ஒரு தங்கக் காசை சப்–இன்ஸ்பெக்டர் பரிசாகக் கொடுக்க முன்வந்தார். ஆனால் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

“இந்தப் புதையல் சட்டப்படி அரசாங்கத்திற்குச் சேர வேண்டியது. ஆகவே எங்களுக்கு அதில் ஒன்றுமே வேண்டியதில்லை” என்று தங்கமணி, சுந்தரம், கண்ணகி மூவரும் சேர்ந்து ஒரே மூச்சில் சொன்னார்கள். சப்–இன்ஸ்பெக்ட ருக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டு விட்டது. “நானாகவே இதில் ஒன்றையும் உங்களுக்குக் கொடுக்க முடியாது என்பது மெய்தான். ஆனால் நீங்கள் செய்த உதவிக்காக இதில் ஒரு தங்க நாணயத்தைக் கொடுத்துவிட்டுப் பின்னால் அரசாங்கத்தின் அனுமதியைப் பெறலாம் என்று எண்ணினேன். ஆனால் நீங்களே இந்தப் பரிசை வாங்கிக் கொள்ள மறுத்ததைக் கண்டு எனக்கு உண்டாகும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை” என்று கூறி அவர் வாழ்த்தினார். கோடை விடுமுறை இப்படி எதிர்பாராத அதிசய சம்பவங்கள் நிகழ்வதற்குக் காரணமாக இருந்ததை மூவரும் நன்கு ரசித்தார்கள்.

“கண்ணுப் பாட்டி, உங்கள் உதவியால்தான் நாங்கள் அந்தத் திருடர்களிடமிருந்து தப்பினோம். உங்களை எப்பொழுதும் மறக்க மாட்டோம்” என்று தம் நன்றியை மகிழ்ச்சியோடு தெரிவித்தார்கள். கண்ணுப் பாட்டி அந்தக் குழந்தைகளின் அன்பைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தாள். ஜின்காவின் குதூகலம் சொல்லி முடியாது. அது குதித்துக் குதித்துத் தன் மகிழ்ச்சியைத் தெரியப்படுத்தியது. சுந்தரம் அதனுடன் சேர்ந்து ஆட ஆரம்பித்துவிட்டான், மற்ற இருவரும் அவனைப் பின்தொடர்ந்து ஆடினார்கள்.

“கண்ணுகளா, நீங்கள் மூவரும் ஜின்காவோடு இங்கேயே இருந்து விடுங்கள்” என்று இன்ப மிகுதியால் கண்ணுப் பாட்டி தெரிவித்தாள்.

“அதெப்படி முடியும் பாட்டி? கோடை விடுமுறைக்குப் பின் நாங்கள் எங்கள் ஊருக்குச் சென்று படிக்க வேண்டாமா? ஆனால் நீங்கள் அன்போடு ‘கண்ணு’ என்று சொல்வதை நாங்கள் நினைத்துக் கொண்டேயிருப்போம்” என்று குழறிக் குழறி சுந்தரம் சொன்னான்.

“ஆமாம் பாட்டி, நீங்கள் ‘கண்ணு’ என்று சொல்வது எங்களுக்கு அமுதமாக இருக்கிறது. இந்தக் கோமாளி அதே வார்த்தையைச் சொன்னா எப்படியோ இருக்கிறது” என்று கண்ணகி கூறினாள்.

அனைவரும் வாய் விட்டுச் சிரித்தார்கள்.

“கண்ணுகளா, வாங்க உங்களுக்கு இன்றைக்குத் தனி விருந்து வைத்திருக்கிறேன்” என்று கூறிக் கண்ணுப் பாட்டி அவர்களை உள்ளே அழைத்துக் கொண்டு போனாள்.

இன்னும் விடுமுறையில் பலநாள் இருந்தன. ஆனால் “உடனே புறப்பட்டுப் போய் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் இந்தச் சம்பவங்களையெல்லாம் நேரில் கூறவேண்டும்” என்றாள் கண்ணகி. தங்கமணியும் அதையே தெரிவித்தான்.

“பாட்டி, உங்களைப் பிரிய மனமில்லாவிட்டாலும் உடனே புறப்பட்டுப் போகத் துடிக்கிறோம்” என்றான் சுந்தரம். அவர்களுடைய உற்சாகத்தைக் கண்டு பாட்டில் இணங்க வேண்டியதாயிற்று.

உடனே தந்தி கொடுத்து விட்டு, அன்று இரவே சென்னையை நோக்கிப் புறப்பட்டார்கள். ஜின்கா ஜிங் ஜிங் என்று ஒருமுறை ஆடிக் காண்பித்து விட்டுக் கண்ணுப் பாட்டியிடம் விடை பெற்றுக்கொண்டது.

முற்றும்...


PLUS MAX
PLUS MAX
EDUCATIONAL INSTITUTIONS
NH 79, Manivizhundhan South (Po), Thalaivasal (Tk),
SALEM (Dt) - 636 121
WANTED
APPLICATIONS ARE INVITED FOR
THE POSTS OF ASSISTANT PROFESSOR IN
Arts and Science
Tamil
Botany
English
Physics
Maths
Chemistry
Computer Science
Computer Applications
Commerce
Commerce With CA
Business Administration
Librarian (M.L.I.S.)
Physical Education (M.P.ED.,)
Preference will be given for
PG with PH.D / SET / NET / M.PHIL
with Minimum 5 years experience
SCHOOL
KG Montessori
Pre-primary
Primary
High School
Higher Secondary
Physical Education
Music
Dance
Art
Library
Preference will be given for
Degree with Montessori /
Freshers too can apply /
UG with B.ED., PG with B.ED
STRONG ENGLISH VERBAL AND WRITTEN COMMUNICATION SKILLS
EXCELLENT TEACHING AND TRAINING ABILITIES
Submit your Resume with Passport Size Photo & Photocopies of Certificate
For More Information
+91 99422 12005, 96777 56005
Send your CV or Portofolio to
hr.india@plusmax.com

# PLUS MAX Medical College And Hospital

(Affiliated to the Tamil Nadu Dr. M.G.R. Medical University, Chennai)

**NH 79, Manivizhundhan South (Po), Thalaivasal (Tk), SALEM (Dt) - 636 121**

# WANTED

## PROFESSOR | ASSOCIATE PROFESSOR | ASSISTANT PROFESSOR | SENIOR RESIDENT

- Anaesthesiology
- Anatomy
- Biochemistry
- Emergency Medicine
- General Medicine
- General Surgery
- Microbiology
- Paediatrics
- Ophthalmologyogy
- Physiology
- Pathology
- Oto-Rhinolaryngology (ENT)
- Obstetrics and gynaecology
- Forensic Medicine & Toxicology
- Community Medicine
- Dermatology
- Radio-Diagnosis
- Pharmacology
- Psychiatry
- Orthopaedics
- Clinical Psychologist

**Tutor / Demonstrator**

**Qualification :** Eligibility as per NMC norms

**Salary is negotiable**

For further details contact :
Mrs. **D.REKHA** HR Department
**+91 96777 56005**

Interested candidates may send their updated resumes to :
**pmch.hr@plusmax.com**

# சிந்தனைக் கவிஞர் கவிதாசனின் நான்கு புதிய நூல்கள் வெளியீட்டு விழா




கோவையில் சிந்தனைக் கவிஞர் கவிதாசனின் நான்கு புதிய நூல்கள் வெளியீட்டு விழா கடந்த 13.03.2026 தேதி, வெள்ளிக்கிழமை மாலையில் நடைபெற்றது. விழாவில் வெற்றி முழக்கம், வெற்றியின் ஓசை, துணிந்தா சாதிக்க முடியும் மற்றும் சிந்தனை கவிஞர் கவிதாசனின் நூல்களை பகுப்பாய்வு செய்து ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை தலைவர் விஸ்வநாதன் எழுதிய பன்முக ஆய்வு கட்டுரைகள் என நான்கு நூல்கள் வெளியிடப்பட்டன.

விழாவிற்கு சிறப்பு விருந்தினராக கோவை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் டாக்டர்.K.கார்த்திகேயன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். விழாவிற்கு வந்திருந்தவர்களை கோவை, பயனீர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர். முருகேசன் வரவேற்றார். முதல் பிரதியை கோவை பாரதியார் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர். R. ராஜவேல் வெளியிட்டு சிறப்புரையாற்றினார். முதல் பிரதியை ஸ்ரீராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் பி.எல்.சிவகுமார் அவர்கள் பெற்றுக் கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

வெற்றியின் ஓசை, வெற்றிமுழக்கம், துணிந்தா சாதிக்க முடியும் மற்றும் பன்முக ஆய்வு கட்டுரைகள் ஆகியவற்றின் நூல் அறிமுக உரையை முறையே சச்சிதானந்த ஜோதி நிகேதன் பன்னாட்டு பள்ளியின் தமிழாசிரியர் கருணாநிதி, கவிஞர்.மீ.உமா மகேஸ்வரி, பொள்ளாச்சி இலக்கிய வட்டத்தின் செயலாளர் கவிஞர். இரா.பூபாலன் மற்றும் ஸ்ரீராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை தலைவர் விஸ்வநாதன் ஆகியோர் வாசித்தனர். இதுவரை சிந்தனை கவிஞர் கவிதாசன் அவர்கள் 90க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வருந்துகிறோம்

தமிழக அரசியல் வரலாற்றில் நேர்மையும் எளிமையும் கொண்ட ஒளிவிளக்காக திகழ்ந்த ஐயா இரா. நல்லகண்ணு அவர்கள் மறைவு மிகுந்த துயரத்தை அளிக்கிறது.

தன்னலமற்ற சேவை, ஊழலற்ற அரசியல், பொதுமக்கள் நலன் ஆகியவற்றை வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்த மகத்தான தலைவர். அதிகாரம் பதவி என்பவற்றை விட கொள்கைக்கும் மனிதநேயத்திற்கும் முன்னுரிமை கொடுத்தவர்.

அவரது மறைவு தமிழகத்திற்கும், சமூக நீதி போராட்டங்களுக்கும் ஈடு செய்ய முடியாத இழப்பு.

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

அவரது குடும்பத்தினருக்கும், கட்சியினருக்கும் ஆழ்ந்த இரங்கல்கள்.



# கொங்கு மாமணி ஐயா கோவை செழியன் அவர்களின் நினைவு நாள்




நமது கொங்கு நாட்டு தங்கம் கொங்கு மாமணி ஐயா கோவை செழியன் அவர்களின் நினைவு நாள்14.03.2026 அன்று சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தில் சங்கத் தலைவர் தலைமையில் அனுசரிக்கப்பட்டது. இதில் சங்க உறுப்பினர்கள் மற்றும் கொங்கு சொந்தங்கள் கலந்து கொண்டு செழியன் ஐயாவின் நினைவு போற்றினர்.



# சக்தி சிறப்புப் பள்ளிகள் மற்றும் சக்தி மறுவாழ்வு மையம்

## டாக்டர் சாந்தி துரைசாமி



சக்தி மசாலா நிறுவனங்களின் ஓர் அங்கமான சக்திதேவி அறக்கட்டளை "சிறப்பு குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டும் என்ற அக்கறையுடன் 24 ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்டது. இத்தகைய குழந்தைகளின் எதிர்காலம் என்னவாகும் என கலங்கித் தவிக்கும் பெற்றோர்களுக்கு, "குறையொன்றும் இல்லை" கவலைப்படாதீர்கள். நாங்கள் இருக்கிறோம்' என்று ஆரம்பிக்கப் பட்டதுதான் சக்திதேவி அறக்கட்டளை.

இதில் சராசரியாக 200க்கும் மேற்பட்ட குழந்தைகள் தினந்தோறும் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். 50-க்கும் மேற்பட்ட பணியாளர்கள் சிறப்பாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் பங்களிப்பு இல்லாமல் சக்திதேவி அறக்கட்டளை சிறப்பாக செயல்படாது. அந்த அளவிற்கு அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றிக் கொண்டிருக்கி றார்கள்.

அடுத்து, வழிகாட்டி திட்டம். அரசுப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு தனியார் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு இணையான வசதிகளோ, வாய்ப்புகளோ இல்லை, அத்தகைய மாணவர்களுக்கு வருடம் முழுவதும் பல்வேறு போட்டிகளை நடத்தி, அவர்களை ஊக்குவித்து அவர்கள் வாழ்விலே ஒளிபெறச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு தொடங்கப்பட்டது தான் வழிகாட்டி திட்டம்.

இத்திட்டத்தின் கீழ் அரசுப் பள்ளிகளில் நூலகம் அமைத்து அறிவை மேம்படச் செய்கின்ற வகையிலே அங்கே பல்வேறு நூல்களை வழங்கி சேவை புரிந்து வருகிறோம். மாணவர்களுக்கு பல்வேறு பயிற்சிகளும் வழங்குகிறோம். நாம் எவ்வளவுதான் ஊக்கப்படுத்தினாலும், மாணவர்களுக்கு கல்வி கற்றுக்கொடுக்கிற ஆசிரியப் பெருமக்கள் சிறப்பாகப் பணிபுரிந்தால்தான் மாணவர் களுடைய கல்வி சிறப்பாக இருக்கும். அந்த வகையிலே ஈரோடு மாவட்டத்திலே 41 பள்ளிகளை வழிகாட்டி திட்டத்திலே தத்தெடுத்து இருக்கிறோம். அந்த 41 பள்ளிகளில் சிறப்பாகப் பணியாற்றி வருகின்ற ஆசிரியர் பெருமக்களுக்கு எங்களுடைய பணிவான வணக்கங்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

அடுத்து விருட்சம் திட்டம். இந்தத் திட்டத்தின் கீழ், விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த பொருளாதாரத்தில் நலிவுற்ற மாணவ, மாணவிகளுக்கு உயர்கல்வி படிப்பதற்காக ஆண்டுதோறும் கல்விக் கட்டணம், தேர்வுக் கட்டணம் செலுத்தி அவர்களை ஊக்கப்படுத்திக் கொண்டிருக்கின்றோம்.

சத்திதேவி அறக்கட்டளை தொடர்ந்து இதுபோன்ற நல்ல பணிகளைச் செய்துகொண்டே இருக்கும் என்கிற நல்ல செய்தியை தெரிவித்துக் கொள்கிறோம்.

# கணினித்தமிழ் மாமணி

## முனைவர் வ.தனலட்சுமி



20 ஆண்டுகளாகத் தமிழ்த்துறைப் பேராசிரியராக, வேளாளர் மகளிர் கல்லூரி , ஏனாதி இராஜப்பா கல்லூரி, அமிர்தா பல்கலைக்கழகம், SRM பல்கலைக்கழகம், கிருஷ்ணகிரி மற்றும் செங்கல்பட்டு அரசு கலைக் கல்லூரிகளில் பணியாற்றி இருக்கிறார். அதில் மூன்றாண்டுகள் தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் உதவி இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார்.

தற்போது, புதுவைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை இணைப் பேராசிரியரான இவர் கணினித்தமிழ் வளர்ச்சியை முன்னெடுப்பவராகத் திகழ்கிறார். இவர் பல கணினிமொழியியல் திட்டங்களைத் தற்காலத் தமிழுக்கும் செவ்வியல் இலக்கியங்களுக்கும் மேற்கொண்டுள்ளார். குறிப்பாக, தமிழ்ச் சொற்களைப் பகுபத இலக்கண அடிப்படையில் பகுத்து, அவற்றின் இலக்கண வகைப்பாடுகளைத் தானாகவே காட்டும் மென்பொருள் கருவிகளை உருவாக்கியுள்ளார். தமிழ்த்தொடரியல், பொருண்மையியல், மின்னகராதி, இயந்திர மொழிபெயர்ப்பு போன்ற பிற கணினித்தமிழ் சார்ந்த ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார்.

தேசிய மற்றும் உலக அளவிலான பல கருத்தரங்குகளில் பங்கேற்று ஆய்வுகளை வழங்கியுள்ளார். பல பன்னாட்டு ஆய்விதழ்களில் கட்டுரைகள் எழுதியுள்ளார். நவீன மொழிபெயர்ப்பு உத்திகள், “Data dependency shallow parser for Tamil” என்ற புத்தகங்களை எழுதியுள்ளார். ‘நிலாக்கால நினைவுகள்” என்ற ஒரு கவிதைத் தொகுப்பையும் வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தகுந்தது.

தமிழக அரசின் புதிய பாடத்திட்டத்தில் , மேல்நிலை சிறப்புத் தமிழ் பாடத்திட்டக்குழு வல்லுநனராகப் பணியாற்றியதோடு "கணினித் தமிழ்" பாடத்தினையும் வடிவமைத்து வழங்கியுள்ளார். ரூபாய்.2 இலட்சமும் தங்கப் பதக்கமும் கொண்ட “தமிழக அரசின் கணினித் தமிழ் விருது-2020” பெற்றவர். மேலும் உலகத் தமிழ்ச் சங்கம் & ஐயை அமைப்பு வழங்கிய சுடரொளி விருது, உலகப் பாவலர் தமிழன்னைத் தமிழ்ப்பேரவை வழங்கிய மொழியியல் மாமணி விருது, Inspire Malaysia foundation வழங்கிய "Global Inspiring Women Award-2020" போன்ற பல விருதுகளைப் பெற்றவர்.

# பேறுகாலப் பெண்மணிகளைப் பேணிக் காக்கும் கண்மணி!

## அனுபமா குமார் விஜய் ஆனந்த்

திருமதி அனுபமா குமார் விஜய் ஆனந்த், விருக்ஷம் கர்ப்ப பராமரிப்பு கல்வியின் நிறுவனர். அவர், சர்வதேச அளவில் சான்றளிக்கப்பட்ட பிரசவ கல்வியாளர் (Childbirth Educator), கர்ப்ப உடற்பயிற்சி கல்வியாளர் (Pregnancy Fitness Educator), கர்ப்ப சுகாதார பயிற்சியாளர் (Pregnancy Health Coach) மற்றும் பாலூட்டுதல் கல்வியாளர் (Lactation Educator) ஆவார். அவர் சிங்கப்பூரில் பயிற்சி பெற்ற ஒரு பர்த் டூலா (Birth Doula) மற்றும் மத்திய அரசின் சான்றளிக்கப்பட்ட குழந்தை மற்றும் இளம் குழந்தை உணவு (Infant and Young Child Feeding Counsellor) ஆலோசகர் ஆவார்.



அனுபாமாவின் சொந்த கர்ப்ப கால அனுபவம் பிரசவக் கல்வியின் உலகத்தை ஆராய ஊக்கப்படுத்தியது. மகப்பேறு பயணத்தின் போது அவர் எதிர்கொண்ட சவால்கள், ‘விருக்ஷம்’ என்னும் நிறுவனத்தை உருவாக்குவதற்கு உந்து சக்தியாக அமைந்தது. கர்ப்ப கால சவால்களை எவ்வாறு எளிதில் எதிர்கொள்வது என்பதை விருக்ஷம் மூலம் தாய்மார்கள் அறிந்து கொள்கின்றனர். இது பெண்களை மேம்படுத்துவதற்கான ஒரு தளமாகவும் இருக்கின்றது. அவரது அர்ப்பணிப்பு முயற்சியால் 56,000 க்கும் மேற்பட்ட தாய்மார்கள் இணைய வழியில் மற்றும் நேரடி வகுப்புகள் மூலம் கர்ப்ப கால கல்வியை கற்றுள்ளனர். அவரது நேரடி வகுப்புகள், திருப்பூரில் உள்ள விருக்ஷம் கர்ப்பகால கல்வி மையம் மற்றும் கோயம்புத்தூரில் உள்ள வுமென்ஸ் சென்டர் (Womens Center by Motherhood) மருத்துவமனையின் மூலம் பத்து ஆண்டுகளுக்கு மேலாக கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழிகாட்டி ஆதரவளித்து வருகிறார்.

ஜனவரி 2013 இல் நிறுவப்பட்ட விருக்ஷம் கர்ப்ப பராமரிப்பு கல்வி, பெண்களுக்கு நேர்மறையான மற்றும் அதிகாரமளிக்கும் கர்ப்ப பயணத்தை வழங்க உறுதிபூண்டுள்ளது. இந்த முயற்சி, தாய்மையின் ஒவ்வொரு கட்டத்திலும் தகவலறிந்த முடிவுகளை எடுக்க தேவையான அறிவு, நம்பிக்கை மற்றும் ஆதரவை கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்குகிறது. கர்ப்பத்திற்கு முந்தைய காலம், கர்ப்ப காலம், பிரசவம், குடும்ப ஆதரவு மற்றும் தாய்ப்பால் பற்றிய ஆதார அடிப்படையிலான, உலகளவில் தகவல்களை தாய்மார்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு கற்பிப்பதில் விருக்ஷம் கவனம் செலுத்துகிறது.

அனுபமா, பச்சிளங்குழந்தை தீவிர சிகிச்சை பிரிவுகளில் (NICU) உள்ள குழந்தைகளுக்கு அவர்கள் அரோக்கியம் மேம்பட குறிப்பிடத்தக்க அர்ப்பணிப்பைக் காட்டியுள்ளார். சக தாய்மார்களை ஊக்குவிக்கும் வகையில் அவர் தனிப்பட்ட முறையில் 6 லிட்டர் தாய்ப்பாலை நன்கொடையாக வழங்கியுள்ளார். மேலும் இன்றுவரை திருப்பூர் அரசு மருத்துவமனையில் உள்ள NICU-க்கு பிற தாய்மார்களிடமிருந்து சேகரித்த, சுமார் 460 லிட்டர் தாய்ப்பால் மற்றும் சில மார்பக பம்புகளையும் (Breast Pump) நன்கொடையாக வழங்குவதில் முக்கிய பங்கு வகித்துள்ளார்.

அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் (PHCs) சுமார் 26 கர்ப்ப பராமரிப்பு இலவச வகுப்புகளை நடத்தியுள்ளார். இவை கர்ப்பிணித் தாய்மார்கள் கர்ப்பத்தின் நிலைகளைப் புரிந்துகொள்ளவும், பிரசவத்திற்குத் தயாராகவும், ஆரோக்கியமான நடைமுறைகளை ஏற்றுக்கொள்ளவும், உடல் மற்றும் உணர்ச்சி மாற்றங்களை நிர்வகிக்கவும், பிரசவம் மற்றும் பிரசவத்திற்குப் பிந்தைய பராமரிப்பு குறித்து தகவலறிந்த முடிவுகளை எடுக்கவும் உதவுகின்றன.

இன்ஸ்டாகிராமில் (Instagram) #AnuakkaGivesBack என்ற சமூக ஊடக பிரச்சாரத்தின் மூலம், அனுபமா,

பெண் தொழில்முனைவோர் தங்கள் தயாரிப்புகளை பரந்த பார்வையாளர்களுக்குக் காண்பிக்க அவர்களை ஆதரிக்கிறார். இந்த முயற்சி அவர்களின் வணிக வளர்ச்சி மற்றும் தெரிவுநிலையை அதிகரித்து, வளர்ந்து வரும் தொழில்முனைவோர் புதிய வாய்ப்புகளை அடைய அதிகாரம் அளிக்கிறது.

அனுபமாவின் கர்ப்பகால பராமரிப்பு பற்றிய கல்வித் தகவல்கள் இணையத்தின் மூலம் உலகம் முழுவதும் பரவி வருகின்றன – இன்ஸ்டாகிராமில் 17 லட்சம் பின்தொடர்வோர், ஃபேஸ்புக்கில் 2.95 லட்சம் பின்தொடர்வோர், மற்றும் யூடியூப்பில் 13.6 லட்சம் சந்தாதாரர்களை கொண்டுள்ளார். இந்த சமூக ஊடக தளங்களின் மூலம், தாய்மை மற்றும் குழந்தை நலன் தொடர்பான விழிப்புணர்வை பரப்பி, ஆதரவு வளங்களைக் உலகளாவிய அளவில் வலியுறுத்தும் பணியை தொடர்ந்து செய்து வருகிறார்.

அனுபமா தனது விதிவிலக்கான சாதனைகள் மற்றும் அவரது துறையில் நீடித்த பங்களிப்புகளை அங்கீகரிக்கும் வகையில் ஏராளமான மதிப்புமிக்க விருதுகளைப் பெற்றுள்ளார். மற்றும் ஹைதராபாத்தில் உள்ள பெர்னாண்டஸ் மருத்துவமனை (Fernandez Hospital) நடத்திய தேசிய அளவிலான பெட்டெர் பிர்திங் மாநாட்டில் (National Level Better Birthing Conference)" அவர் ஒரு சிறப்பு பேச்சாளராகவும் இருந்துள்ளார்.

**தேசிய விருதுகள்:**

★கிட்ஸ்ஸ்டாப்பிரஸ் (Kidsstoppress) வழங்கும் "பெஸ்ட் மாம் இன்பிளியூவென்சர் ஒப் தி இயர்" (Best Mom Influencer of the Year) விருது - 2023, 2024, 2025, 2026

★WHOSTHAT360 மற்றும் NDTV வழங்கும் "பேரென்டிங் எக்ஸ்பிர்ட் ஒப் தி இயர் 2023" (Parenting Expert of the Year 2023) விருது

★ஷி பத்திரிகை விருதுகள் "பெஸ்ட் இன்பிளியூவென்சர் அவார்டு ஒப் தி இயர் - தெற்கு " (Best Influencer award of the year(South))

★ஷி கிரியேட்ஸ் 2023 இன் ஒரு பகுதியாக யூடியூப் மற்றும் ட்ரெண்ட் லவுட் வழங்கும் "தி விஷனரி கிரியேட்டர்" (The Visionary Creator) விருது

★பேபிசக்ரா விருதுகள் "மாற்றத்தை உருவாக்குபவர் 2021/10 புதிய இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தாய்மார்கள்" விருது (Change maker 2021/10 Trailblazing Moms Representating The New India)

★ஸ்டார் ஐகான் ஆஃப் இந்தியா 2023 வழங்கும் 'இன்ஸ்பியரிங் வுமன் இன்பிளியூவென்சர் " (Inspiring Women Influencer) விருது

**மாநில விருதுகள்:**

★JFW பெண்கள் சாதனையாளர் விருதின் ஒரு பகுதியாக jfwdigital வழங்கும் "ஆண்டின் டிஜிட்டல் மாற்றத்தை உருவாக்குபவர்" விருது (Digital Change Maker of the Year)

★குழந்தை பிறப்பு கல்வியாளர் சமூக சேவைகளுக்கான 'இந்திய மருத்துவ சங்கம்/IMA' வழங்கும் "2023 பெண்கள் சாதனை விருது" (Women Achievement Award 2023)

★கலர்ஸ் தமிழ் டிவியின் "ஹோம்பெரெனியூர் விருது சீசன் 3" (Homeprenuer Award Season 3) மாநில அளவிலான வெற்றியாளர்

★KWW வின் "கோவை அதிசய பெண்கள் 2020" (Kovai wonder women 2020)

★வாவ் விருதுகளின் "அற்புதமான பெண்கள்" (Women of Wonder)

★KGISLன் "திருமதி திவ்யலட்சுமி விருது" (Smt. Divyalakshmi Award)

★வொண்டர் டயமண்ட்ஸ் வழங்கும் "வொண்டர் பெண்கள் 2023" (Wondr women 2023)

★நேரு சென்டர் ஃபார் வுமன் எக்ஸலேன்ஸ் "நேரு மகளிர் சிறப்பு விருது 2020" (Nehru women excellence award 2020) வழங்கி கௌரவித்தது

★ரோட்டரி திருப்பூர் பிரைம் "தொழில்சார் சிறப்பு விருது" (The Vocational Excellence Award) வழங்கியது

★ரோட்டரி திருப்பூர் ஸ்மார்ட் சிட்டியின் "தொழில்சார் ஆளுமை செயல்திறன் விருது" (The Vocational Personality Performance Award)

★சமூகத்திற்கு அவர் அளித்த சிறந்த சேவையை கௌரவித்து ஜே.சி.ஐ அவருக்கு "செயல்பாட்டு குடிமகன்" (Active Citizen) விருதை வழங்கியது

★சுயசக்தி விருதுகள் வழங்கும் "சுயசக்தி விருது 2019" (Suyasakthi Award)



# அர்ப்பணிப்புடன் ஆற்றிய சேவை!



## நிர்மலா

அது 1985ம் ஆண்டின் இறுதிப்பகுதி. சென்னை மருத்துவக்கல்லூரியில் MD Microbiology படித்துக் கொண்டிருந்த திருமதி நிர்மலா செல்லப்பன் அவர்களுக்குத் தன் ஆய்வறிக்கை க்காக ஒரு தலைப்பு தேவைப்பட்டது. அவரது பேராசிரியையும்,வழிகாட்டியுமான திருமதி சுனிதி சாலமன் அவர்கள் "Surveillance of AIDS in Tamilnadu"என்னும் தலைப்பைத் தேர்ந்தெடுத்தார்.

அப்போது தான் நான்கு ஆண்டுகளுக்கு முன் 1982ல் அமெரிக்காவில் முதன்முதலில் எய்ட்ஸ் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.பண்பாட்டுச் செறிவும்,கடவுள் நம்பிக்கையும், கட்டுப்பாடுகளும் மிகுந்த இந்திய நாட்டில் இந்நோய் பரவியிருக்க வாய்ப்பில்லை என்றே அப்போது கருதப்பட்டு வந்தது. சிறு கிராமத்தில் கட்டுப்பாடுகள் மிகுந்த குடும்பத்தில் வளர்ந்த சற்றே கூச்ச சுபாவமுடைய நிர்மலா அவர்களுக்குப் பாலியல் தொழிலாளர்களிடம் இரத்த மாதிரிகள் எடுப்பது என்பது அத்தருணத்தில் மிகப்பெரிய சவாலாக இருந்தது.

பாலியல் தொழிலாளர்கள், ஓரினச்சேர்க்கை யாளர்கள், ஆப்பிரிக்க மாணவர்கள் என 200 பேரிடம் இரத்தப் பரிசோதனை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது. சென்னை அரசுப்பொது மருத்துவமனைக்குச் சென்ற போது கைது செய்யப்பட்டு கண்காணிப்பு இல்லத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த பாலியல் தொழிலாளர்களின் அறிமுகம் கிடைத்தது. கிட்டத்தட்ட மூன்று மாதங்களுக்கும் மேலாக நிர்மலா அவர்கள் கண்காணிப்பு இல்லத்திற்கு சென்று எவ்விதமான பாதுகாப்பு உபகரணமும் இல்லாமல் 80 பேரிடம் இரத்த மாதிரிகளைச் சேகரித்தார்.அவர்களிடம் எய்ட்ஸ் என்று தெரிவிக்காமல் பொதுவான பாலியல் வியாதிகளுக்கான சோதனை எனக் கூறி விட்டார்.

பின்னர் சுனிதி சாலமன் அவர்களின் சிறிய ஆய்வகத்தில் Serum பிரித்தெடுக்கப்பட்டு அவற்றைத்தன் வீட்டுக் குளிர்சாதனப் பெட்டியிலேயே வைத்திருந்தார்.Elisa சோதனை வசதி அப்போது சென்னையில் இல்லாத காரணத்தினால் அவற்றை வேலூர் சிஎம்சிக்கு எடுத்துச்சென்றார்.

அங்கு சிலருடைய இரத்தத்தில் HIV பாதிப்பிற்கான அறிகுறிகள் தென்படவே உடனடியாக சென்னை வந்து சுனிதி சாலமன் அவர்களிடம் தெரியப்படுத்தினார்.திரும்பவும் அந்த பாதிப்பிற்குள்ளான ஆறு பேரிடம் இரத்தம் எடுக்கப்பட்டு அவை Western blot test க்காக அமெரிக்கா அனுப்பி வைக்கப்பட்டன. அந்த சோதனையிலும் பாதிப்பு உறுதி செய்யப்படவே இச்செய்தி இந்திய மருத்துவக்கழகத்திற்கும்,அப்போதைய பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்கும்,தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் திரு.ஹெச்.வி.ஹண்டே அவர்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டது.

நாட்டில் மிகப்பெரிய அதிர்ச்சி அலையை ஏற்படுத்திய இம்முடிவுகள் சட்ட மன்றத்தில் அறிவிக்கப்பட்ட போது சுனிதி சாலமன் மற்றும் நிர்மலா ஆகிய இருவரும் பார்வையாளர் கூடத்தில் அமர்ந்திருந்தனர்.

முதலில் மக்கள் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை.மகா ராஷ்டிரா மாநிலத்திலிருந்து வந்த சுனிதி சாலமன் வேண்டுமென்றே நம்மை அசிங்கப்படுத்து கிறார் எனக் கோபப்பட்டனர். அதன்பின்னர் எய்ட்ஸ் சோத னைகள் தீவிரமாக்கப்பட்டதும் ,சிகிச்சை முறைகள் விரிவடைந்ததும நாமனைவரும் அறிந்ததே.

அண்மையில் மறைந்த சுனிதி சாலமன் அவர்கள் சென்னை யின் முதல் தன்னார்வ HIV பரிசோதனை மற்றும் ஆலோசனை மையமான YRG careஐ நிறுவியவர்.திருமதி நிர்மலா அவர்கள் 2010 ம் ஆண்டு வரை சென்னை King Instituteல் பணியாற்றி இணை இயக்குநராக ஓய்வு பெற்றார்.

அப்போதைய நாளிதழ்களில் வந்ததோடு மறக்கப்பட்ட இச்செய்தி பிபிசி செய்தி மூலமாக 30 ஆண்டுகளுக்குப்பிறகு கடந்த ஆண்டு வெளி வந்தது. இத்தகைய ஆய்வைத் துணிச்சலாகத் தேர்ந்தெடுத்த சுனிதி சாலமன் அவர்களும்,சொற்ப வசதிகளைக் கொண்டு ஆய்வை நேர்மையாக, அர்ப்பணிப்புடன் மேற்கொண்ட நிர்மலா அவர்களும் சாதனைப்பெண்மணிகள்! முதன்முதலாக இக்கண்டுபிடிப்பு நிகழ்த்தப்பட்டது தமிழ் மண்ணில்!

மருத்துவத்துறை படிக்க ஆர்வமும்,புதிய நோக்கில் சிந்திக்கும் திறனும், நேர்மையான அர்ப்பணிப்பும் ஆகிய இவையே தகுதி என இருவரும் என்றோ நிரூபித்துவிட்டனர்.

# உலகத் தரத்தில் ஓர் உன்னதப்பள்ளி!


## Dr. சவீதா ராஜேஷ்

**MBBS, MD (Radio-Diagnosis)**

இயக்குநர்


Dr. சவீதா ராஜேஷ் அவர்கள், ஸ்ரீ ராமச்சந்திர மருத்துவக் கல்லூரியில் MBBS மற்றும் MD (Radiology) பட்டங்களைப் பெற்றார். மாணவராக இருந்த காலத்தில் குழந்தை நல மருத்துவத் துறையில் "மாஸ்டர் கார்த்திகேயன் தங்கப் பதக்கம்" வென்றார்.



கல்வியின் மீது கொண்ட ஆழ்ந்த ஆர்வமும், இளம் தலைமுறையின் திறமைகளை வளர்க்க வேண்டும் என்ற உறுதியும் கொண்டு 2012 ஆம் ஆண்டு முதல் "The Pupil Saveetha Eco School" என்ற கல்வி நிறுவனத்தை செவ்வனே நடத்தி வருகிறார்.

The Pupil School QS I-GAUGE வழங்கிய "Platinum Plus Certification" பெற்ற இந்தியாவின் முதல் மற்றும் ஒரே பள்ளி என்ற பெருமையைப் பெற்றது. மேலும், JEE/ NEET தேர்வுகளுக்கான "Super 100" சிறப்பு திட்டத்தின் மூலம் பல மாணவர்கள் Indian Institutes of Technology மற்றும் தேசிய அளவிலான முன்னணி கல்வி நிறுவனங்களில் சேர்ந்து சாதனைப் படைத்துள்ளனர். பள்ளி வளாகம் Indian Green Building Council வழங்கிய Platinum Green Building Certification பெற்ற சுற்றுச்சூழல் நட்பு கட்டிடமாக அமைந்துள்ளது.

2017 ஆம் ஆண்டு, உலகளாவிய பார்வையில் மாணவர்களை உருவாக்கும் நோக்கில் "The Pupil International School" நிறுவப்பட்டது. இப்பள்ளி International Baccalaureate பாடத்திட்டத்தை வழங்குகிறது. இது ஒரு IB Continuum பள்ளி ஆகும். இதில் Primary Years Programme (PYP), Middle Years Programme (MYP) மற்றும் Diploma Programme (DP) ஆகிய மூன்று நிலைகளுக்கும் வழங்கப்படுகின்றன.

கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளில் அவர் செய்த பங்களிப்புக்காக Dr. சவீதா ராஜேஷ் பல விருதுகளைப் பெற்றுள்ளார். அவற்றில் Young Achiever Award (2014), Women Edupreneur Award (2015), COVID-19 காலத்தில் மருத்துவ சேவைக்காக Tamil Nadu Medical Council வழங்கிய விருது (2020) மற்றும் Indian Medical Association வழங்கிய Academic Entrepreneurship Excellence Award (2021) ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

தன் தந்தையும், வழிகாட்டியுமான Dr. என்.எம் வீரையன் அவர்களின் வழிகாட்டுதலில் NMV University உருவாக்கப்பட்டதன் மூலம், உயர்கல்வித் துறையிலும் தனது பங்களிப்பை மேலும் விரிவுபடுத்த உள்ளார்.

அவர் ஒரு தொலைநோக்குப் பார்வையுடன் செயலாற்றும் ஆகச் சிறந்த கல்வியாளர், அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் மிகச்சிறந்த மருத்துவர் மற்றும் மாணவர்களின் உணர்வுகளுக்கு உரமூட்டும் எழுச்சி மிக்க ஆசிரியர் எனப் பரவலாகப் போற்றப்படுகிறார்.

# ஊற்றின் ஊற்றுக்கண்!

## V.N.ஷிவானி



**V.N.** ஷிவானிஅவர்கள் Devkrish Aqua Systems நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராக (Executive Director) இருந்து Uutru Packaged Drinking Water என்ற குடிநீர் தயாரிப்பு நிறுவனத்தை தரம், நம்பிக்கை மற்றும் சிறந்த சேவை அடிப்படையில் முன்னேற்றி வருகிறார். மேலும் Sri Devkrish Group நிறுவனத்தின் இயக்கு நராகவும் செயல்பட்டு, நிறுவன வளர்ச்சியில் முக்கிய பங்காற்றி வருகிறார்.

16 மார்ச் 2002 அன்று கே. நித்யானந்தன் மற்றும் என். வனிதா ஆகியோருக்கு மகளாக பிறந்த இவர், தமிழ்நாட்டின் பொள்ளாச்சி நகரத்தைச் சேர்ந்தவர். தனது சொந்த ஊரின் கலாச்சாரம், ஒழுக்கம் மற்றும் பாரம்பரிய மதிப்புகளால் ஊக்கமடைந்து வளர்ந்த இவர், அந்த பண்புகளை தனது தொழிலிலும் தலைமையிலும் வெளிப்படுத்தி வருகிறார்.

அவர் தனது பள்ளிக் கல்வியை பொள்ளாச்சியில் உள்ள Shaanthi Schools-ல் முடித்தார். பின்னர் கோயம்புத்தூரில் உள்ள PSGR Krishnammal College for Women-ல் மனையியல் (B.Sc Psychology) பட்டம் பெற்றார். அதன் பிறகு சென்னை SRM பல்கலைக்கழகத்தில் "Yoga for Human Excellence" துறையில் M.Sc பட்டம் பெற்றார். மேலும் Amity University, Noida-வில் தொழில்முனைவு மற்றும் தலைமைத்துவ மேலாண்மை (MBA in Entrepreneurship & Leadership Management) பட்டம் பெற்றார்.

தொழில்துறையில் ஈடுபட்டிருப்பதுடன், **V.N.**ஷிவானி அவர்கள் Ekcavashini Unique Living என்ற அமைப்பின் நிறுவுநராகவும் செயல்படுகிறார். இந்த மையம் குழந்தைகள் மற்றும் பெண்களின் முழுமையான வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. இதில் chakra analysis, cerebro mapping, psychology profiling போன்ற முறைகளின் மூலம் குழந்தைகளின் திறன்கள், வலிமைகள் மற்றும் சவால்களை அறிந்து அவர்களின் சமநிலையான வளர்ச்சிக்காக வழிகாட்டப்படுகிறது.

மேலும் இந்த அமைப்பின் ஒரு பகுதியாக குழந்தைகளுக்கான மந்திர ஓதுதல் மற்றும் தியான வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இந்த பயிற்சிகள் குழந்தைகளின் கவனம், மனஅமைதி, தன்னம்பிக்கை மற்றும் உணர்ச்சி நிலைத்தன்மையை மேம்படுத்த உதவுகின்றன. இளம் வயதிலேயே நல்ல ஒழுக்கம், தெளிவான சிந்தனை மற்றும் நேர்மறை எண்ணங்கள் வளர்வதற்காக இந்த பயிற்சிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

சமூகப்பணியிலும் ஆர்வம் கொண்ட **V.N.**ஷிவானி அவர்கள் Pollachi People's Welfare Association உடன் இணைந்து கிராமப்புறங்களில் உள்ள குழந்தைகளுக்கு இலவச மந்திர ஓதுதல் மற்றும் பயிற்சிகளை வழங்கி வருகிறார். இதன் மூலம் சமூகத்தின் அனைத்து தரப்பினருக்கும் மதிப்புகள் மற்றும் ஆன்மீக கல்வி கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் செயல்பட்டு வருகிறார்.

அவர் ஒரு Wellness Coach மற்றும் சிறந்த பேச்சாளராகவும் அறியப்படுகிறார். KPR Institutions, PA Institutions, Vanavarayar Agricultural Institute மற்றும் National Model School போன்ற பல கல்வி நிறுவனங்களில் மாணவர்களுக்கு ஊக்கப்பேச்சுகள் வழங்கி யுள்ளார். மேலும் Anil Foods நிறுவனத்தின் நிர்வாக இயக்குநருடன் நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டு இளம் பெண்கள் தொழில்முனைவோராக உருவாக ஊக்கமளிக்கும் உரைகள் வழங்கி யுள்ளார்.

தொழில் மற்றும் சமூகப்பணிகளுக்கு அப்பாற்பட்டு, **V.N.**ஷிவானி அவர்கள் கலை மற்றும் கலாச்சாரத்திலும் ஆர்வம் கொண்டவர். இவர் பரதநாட்டியம் நடனக் கலைஞராகவும், வீணை கற்கும் கலைஞராகவும் உள்ளார். ஓவியம் வரைவதிலும் ஆர்வம் கொண்ட இவர், தனது படைப்பாற்றலை கலை வழியாக வெளிப்படுத்துகிறார்.

பாரம்பரிய மதிப்புகளையும் நவீன சிந்தனையையும் இணைத்து, தொழில்துறை, சமூகப்பணி மற்றும் ஆன்மீக வளர்ச்சி ஆகிய துறைகளில் செயல்பட்டு வரும் இளம் தொழில்முனைவோராக **V.N.**ஷிவானி அவர்கள் திகழ்கிறார்.

# மாணவர்களுக்கு வழிகாட்டும் விழி!

## சந்தியா ஜெயசந்திரன்



திருமதி சந்தியா ஜெயசந்திரன் அவர்கள் Samskriya Foundation என்ற அரசு அல்லாத அமைப்பின் (NGO) நிறுவனர் அறங்காவலராக (Founder Trustee) செயல்பட்டு வருகிறார். இந்த அமைப்பு அரசு பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு தரமான கல்வியை வழங்க வேண்டும் என்ற நோக்கத்துடன் செயல்படுகிறது. கடந்த 12 ஆண்டுகளில் இந்த அமைப்பின் செயல்பாடுகள் மூலம் 35,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

இந்த அமைப்பின் முக்கிய திட்டமாக “Lab in a Backpack” என்ற STEM (Science, Technology, Engineering, Mathematics) கல்வித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டம் மூலம் நடுநிலைப் பள்ளி மாணவர்களிடையே அறிவியல் மற்றும் ரோபோடிக்ஸ் குறித்து அதிக ஆர்வம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் மாணவர்கள் அறிவியல் கருத்துகளை நேரடியாக அனுபவித்து கற்றுக்கொள்ள உதவுகிறது.

மேலும், Samskriya “Read a Way” Library திட்டத்தின் மூலம் பல்வேறு பள்ளிகளுக்கு மாணவர்களின் கலாச்சாரத்துக்கு ஏற்ற வகையில் சுமார் 40,000 புதிய புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த முயற்சி மாணவர்களில் வாசிப்பு பழக்கத்தை வளர்க்கவும் அறிவை விரிவுபடுத்தவும் உதவுகிறது.

2022-23 ஆம் ஆண்டில் Inner Wheel Club of Madras அமைப்பின் தலைவராக (President) இருந்த போது, கல்லூரிகளில் வர்த்தகம் (Commerce), அறிவியல் (Science) மற்றும் கலை (Arts) துறைகளில் படிக்கும் மாணவர்களுக்கு உதவியாக Career Counselling தொடர்பான ஒரு புத்தகத்தை வெளியிட்டார்.

அதற்கு முன் 2021-22 ஆம் ஆண்டில் அதே அமைப்பின் செயலாளராக (Secretary) இருந்தபோது, +2 படிக்கும் மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டும் (Career Counselling) புத்தகத்தை உருவாக்கும் பணியிலும் அவர் ஈடுபட்டார். இந்த இரண்டு புத்தகங்களும் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்பட்டு, அதன் இலவச அச்சு மற்றும் டிஜிட்டல் பதிப்புகள் தமிழ்நாடு முழுவதும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இவை மாணவர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

மேலும், FICCI Flo Chennai அமைப்பில் கல்வித் துறையின் (Education Vertical) தலைவராகவும் செயற்குழு உறுப்பினராகவும் (Executive Committee Member) இருந்து, பள்ளி மாணவர்களுக்கு STEM கல்வி தொடர்பான பல நிகழ்ச்சிகளையும், கல்லூரி மாணவர்களுக்கு நிதி அறிவு (Financial Literacy) மற்றும் ChatGPT போன்ற புதிய தொழில்நுட்பங்கள் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் நடத்தி வருகிறார்.

அவரது சமூக சேவைகள் மற்றும் கல்வி மேம்பாட்டிற்கான முயற்சிகள் மூலம் பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் பயன் அடைந்து வருகின்றனர்.

# உலகளாவிய நிதி நிறுவனத்தின் உப தலைவர்

## சசிகலா



சசிகலா தகவல் தொழில்நுட்ப துறையில் 20 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் கொண்ட திறமையான தொழில்நுட்ப தலைவராக விளங்குகிறார். தரவு தளம் (Data Platform), தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் அணித் தலைமையில் சிறப்பாக செயல்பட்டு வருகிறார்.

சசிகலா தமிழ்நாட்டின் Karur மாவட்டத்தில் உள்ள Vangal பகுதியில் அமைந்த வங்கல் அம்மன் வணங்கும் பெருங்குடி குலத்தில் பிறந்தவர். விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த பெற்றோர் சின்னசாமி மற்றும் அன்னலட்சுமி. சிறுவயதிலிருந்தே உழைப்பு, ஒழுக்கம் மற்றும் கல்வியின் முக்கியத்துவத்தை குடும்பத்திலிருந்தே கற்றுக்கொண்டார்.

அவர் தனது பள்ளிப்படிப்பை Rani Meyyammai School பள்ளியில் முடித்தார். பின்னர் Bannari Amman Institute of Technology கல்லூரியில் பொறியியல் படித்து 2006 ஆம் ஆண்டு பட்டம் பெற்றார்.

கல்லூரி வளாகத் தேர்வின் மூலம் Cognizant நிறுவனத்தில் தனது தொழில்நுட்ப வாழ்க்கையை தொடங்கிய அவர், அங்கு 16 ஆண்டுகள் பணியாற்றி பல முக்கியமான தொழில்நுட்ப திட்டங்களில் பங்காற்றினார். பின்னர் Barclays நிறுவனத்தில் Data Platform பிரிவில் Vice President ஆக இணைந்து, வங்கித் துறையில் தரவு சார்ந்த நவீன தொழில்நுட்ப மாற்றங்களை முன்னெடுத்து வருகிறார்.

தனது தொழில்நுட்ப வாழ்க்கையில் முன்னேற்றம் அடைந்ததோடு, குடும்ப வாழ்க்கையிலும் சமநிலையை பேணி வருகிறார். அவர் Cognizant நிறுவனத்தில் Associate Director ஆக பணியாற்றும் சசிகாந்த் அவர்களைத் திருமணம் செய்து கொண்டுள்ளார். இவர்களுக்கு 6 வயது மகன் அதிரன் உள்ளார்.

கரூரின் ஒரு கிராமத்தில் இருந்து தொடங்கி, உலகளாவிய நிதி நிறுவனத்தில் Vice President ஆக உயர்ந்துள்ள அவரது 20 ஆண்டு தொழில்நுட்ப பயணம், அர்ப்பணிப்பு, முயற்சி மற்றும் உறுதியின் சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்கிறது.

# கல்வி எனும் அமிர்தம் புகட்டும்

## அமிர்தநாயகி பிரபாகரன்

திருமதி. அமிர்தா பிரபாகரன் அவர்கள் கடந்த 23 ஆண்டுகளாக கல்வித் துறையில் அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வரும் கல்வியாளர். 2004 ஆம் ஆண்டு Shiva Niketan School என்ற மழலையர் பள்ளியை தொடங்கி தனது கல்விப் பயணத்தை ஆரம்பித்தார்.

தொடர்ச்சியான முயற்சி, அர்ப்பணிப்பு மற்றும் தெளிவான கல்வி நோக்கத்தின் மூலம் அந்த சிறிய முயற்சியை வளர்ச்சி பாதையில் முன்னேற்றி, இன்று மூன்று கல்வி நிறுவனங்களாக விரிவடைந்த கல்வி வளாகமாக உருவாக்கி யுள்ளார்.



தற்போது மழலையர் மற்றும் ஆரம்பப்பள்ளியுடன் Central Board of Secondary Education(CBSE) பாடத்திட்டப் பள்ளி மற்றும் சர்வதேச தரத்தில் இயங்கும் Cambridge International Education IGCSE கல்வி வளாகம் ஆகியவை அதன் ஒரு பகுதியாக செயல்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு நாளும் சுற்றுப்புற சூழலிலிருந்தும், என்னைச் சுற்றியுள்ள மக்களிடமிருந்தும் புதிய விஷயங்களை கற்றுக்கொள்வதே எனது வளர்ச்சி என்ற எண்ணத்துடன், அந்த அனுபவங்களையும் கற்றல்களையும் பள்ளி கல்வியில் இணைத்து மாணவர்களுக்கு புதுமையான மற்றும் வாழ்வியல் சார்ந்த கல்வியை வழங்கி வருகிறார்.

கல்வித் துறையில் தொடர்ந்து முன்னேற்றம் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் Finland,-Japan, Dubai,Bali மற்றும் Singapore போன்ற நாடுகளுக்கு பயணம் செய்து அங்குள்ள பள்ளிகளை பார்வையிட்டு, பல்வேறு கல்வி மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகளில் கலந்து கொண்டு தனது அறிவையும் அனுபவத்தையும் மேம்படுத்தி வருகிறார்.

"ஒவ்வொரு குழந்தையிலும் உள்ள தனித்திறனை கண்டறிந்து வளர்க்கும் கல்வி சூழலை உருவாக்குவது எங்கள் நோக்கம். அறிவு, ஒழுக்கம் மற்றும் மனிதநேயத்தை இணைக்கும் கல்வியின் மூலம் எதிர்கால தலைமுறையை உருவாக்க வேண்டும் என்பதே எங்கள் கனவு. உலகளாவிய பார்வையுடன் சிந்திக்கும், சமூகப் பொறுப்புள்ள நல்ல குடிமக்களை உருவாக்குவது தான் எங்கள் கல்வி பயணத்தின் இலக்கு."

சிவா நிகேதன் பள்ளியின் நிர்வாக அறங்காவலர் திரு R.பிரபாகரன் அவர்கள் பள்ளி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வருகிறார். எங்கள் பள்ளியில் தரமான கல்வி மற்றும் நவீன கற்பித்தல் முறைகள் மாணவர்களின் முழுமையான வளர்ச்சிக்காக வலுவூட்டப்படு கிறது.

இணைபாடத் திட்டம் மற்றும் கூடுதல் பாடத்திட்ட செயல்பாடுகள் ஊக்குவிக்கப்படுகிறது. ஆசிரியர்களுக்கு கல்வி மேம்பாட்டிற்கான பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது. மாணவர்களின் பன்முக திறன்களான கல்வி, கலை, விளையாட்டு, அறிவியல் சிந்தனைகள் மற்றும் படைப்பாற்றல்களை வெளிக்கொணர்வதில் முக்கியப் பங்காற்றி வருகிறது. ஒவ்வொரு குழந்தைகளும் தங்களின் திறமைகளை தனித்தனியே வெளிப்படுத்துவதன் மூலம் தன்னம்பிக்கை, ஒற்றுமை மற்றும் ஒழுக்கம் போன்ற நற்பண்புகளை வளர்த்துக் கொள்ள உறுதுணையாக இருக்கின்றது. மாணவர்கள் தங்களின் வகுப்பறையை தூய்மையாக வைத்து நல்ல சூழலை உருவாக்கி ஆரோக்கியத்துடனும் மகிழ்ச்சியுடனும் கல்வி கற்று வருகின்றனர்.

இன்றைய மாணவர்கள் நாளைய தலைவர்களாக உருவாகுவதில் சிவாநிகேதன் பள்ளி முக்கியப் பங்காற்றி வருகிறது.

# ஐஸ்வர்யா மருத்துவக் குழுமம்

## டாக்டர் சந்திரலேகா

நிறுவனர்:- டாக்டர் S.சந்திரலேகா
MBBS.,DGO, ART (SING), MRCOG

தலைவர்:- Dr.வேலுசாமி

நிர்வாக இயக்குனர்:- Dr.அருண் முத்துவேல்

அனுபவ வருடங்கள்: 36



டாக்டர் S.சந்திரலேகாவின் பயணம் கொங்கு மண்டலத்தில் ஆரம்பித்து இன்று வெளி மாநிலங்கள், வெளிநாடுகள் வரை வியாபித்து தற்போது 80 மருத்துவமனைகளாக தனது விழுதுகளை ஊன்றி, பல லட்சக்கணக்கான தம்மதியர் வாழ்க்கையில் மழலை இன்பத்தை தரும் மருத்துவ சோலையாக மாறி உள்ளது.

இதற்கு காரணம் அந்த ஒரே ஒரு சாதனை பெண்மணிதான். இவர் பெண்ணினத்தில் சாதிக்க பிறந்தவர் என்றால் அது மிகையாகாது.

குழந்தையில்லா தம்பதிகளின் கனவை நனவாக்கி, கருவாக்கி, உருவாக்கி, உயிர் தருபவர் ஐஸ்வர்யா மகளிர் மகப்பேறு கருத்தரித்தல் மைய தலைமை மருத்துவர் டாக்டர் சந்திரலேகா. இவரின் சாதனை பயணம் இன்று ஆரம்பித்தது அல்ல.

1978: எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் மாநில அளவில் முதலிடம்

1979: பல்கலைக்கழகத்தில் முதலிடம்

1986: MBBS அனைத்து பாடங்களிலும் தங்க பதக்கம்

1990: மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவத்தில் தங்க பதக்கம்

1990-1996: சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தில் IVF தொடர்பான சிறப்பு பயிற்சி

பழனியில் ஐஸ்வர்யா கருத்தரித்தல் மையம் தொடங்கப்பட்டது

2000: பழனியில் ஐஸ்வர்யாவில் முதல் IVF குழந்தைகள் பிறந்தன

2006-2010: 3 கிளைகள் (கோயமுத்தூர், மதுரை, சென்னை)

2012: உறைய வைக்கப்பட்ட கரு முட்டை கொண்டு இந்தாய்வில் முதல் குழந்தை, மேலும் இரு கர்ப்பபை கொண்ட பெண்ணுக்கு இரட்டை குழந்தை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்த பெண்ணுக்கு குழந்தை பாக்கியம் மற்றும் புற்றுநோய் சிகிச்சை பெண்ணுக்க கருவுற செய்தல்

2010-2013: 13 கிளைகள் (தென்னிந்திய கிளைகள்)

2016: RAJ TV சாதனை மகளிருக்கான சாதனை

2017: ஆசியாவில் சிறந்த கருத்தரிப்பு சிகிச்சை மையத்திற்கான விருது

உங்களுக்கும் ஒரு குழந்தை புத்தகத்தை வெளி யிட்டு பாராட்டிய முன்னாள் தமிழக கவர்னர் ரோசையா.

2021-2026 : 61 கிளைகள் (வடக்கு மற்றும் தெற்கிந்திய கிளைகள்)

2025: ஐஸ்வர்யா பன்முக சிறப்பு மருத்துவமனை. 400 படுக்கைகள், 24x7 மேம்பட்ட சுகாதார பராமரிப்பு, ஓ.எம்.ஆர்., தரமணி, சென்னை.

2026: ஐஸ்வர்யா புற்றுநோய் மையத்தை நடிகர் திரு.சத்யராஜ் அவர்கள் திறந்து வைத்தார்

இன்று வரை ஐஸ்வர்யா கருத்தரித்தல் மையத்தில் 5 லட்சத்துக்கு மேற்பட்ட குழந்தைகள் பிறந்து சாதனை

இனி உங்களுக்கும் ஒரு குழந்தை...

# ஃபெமி 9 பெண்மணி!

## Dr.V.கோமதி



நிறுவனர் பெமி 9

ஈரோட்டில் மலர்ந்த அழகான ஆயுத எழுத்து

மாற்றம் என்பது மற்றவர்களின் மற்றவர்களின் துன்பங்களுக்குத் தீர்வு காணும் சிந்தனையில் உருவாகிறது. சிந்தனை செயல்வடிவம் பெறும் போது உலகம் பயன்பெறுகிறது. பெண்களைப் பற்றிய ஆக்கபூர்வமான சிந்தனையின் செயல் வடிவம், சிறந்த சாதனையாளரை உருவாக்கியுள்ளது.

2008- ...

பெண்களின் மாதவிடாய் ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வு இல்லாததைக் கண்டு இவரின் மனம் கலங்கியது. துணி, சாம்பல், மண் போன்றவற்றைப் பயன்படுத்துவதனால் பெண்களுக்கு ஏற்படும் விளைவுகளைத் தடுக்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்தினால் டாக்டர் கோமதி –பாதுகாப்பான, நாப்கின்களை உருவாக்க முடிவு செய்து, ஃபெமி சானிட்டரி நாப்கின் நிறுவனத்தைத் தொடங்கினார்.

15 ஆண்டுகளாக 10 லட்சத்துக்கும் மேற்பட்ட பெண்களுக்கு விழிப்புணர்வு வகுப்புகள், தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்கான பள்ளிகள், கல்லூரிகளில் சென்று குரல் கொடுத்துள்ளார்.மேலும், இப்பணி தொடர்கிறது.

ஒரு லட்சம் முதலீட்டில் தொடங்கிய இவரது பயணம், இன்று கல்லூரிகளில் MBA பாடத்திட்டமாகக் கற்பிக்கப்படும் அளவிற்கு வளர்ந்துள்ளது...

2024 ஆம் ஆண்டு தென்னிந்திய முன்னணி நட்சத்திரமான நயன்தாரா அவர்கள் பங்குதாரராக இணைந்த பிறகு, FEMI, "FEMI 9" என்றாகி, உலகத்தை நோக்கிப் பயணிக்கிறது. ஈரோட்டில் தந்தையர் தினத்தை முன்னிட்டு 100 தந்தையர்கள் 3,000 நாப்கின்கள் கொண்டு விழிப்புணர்வு உருவப்படத்தை உருவாக்கிய நிகழ்வு இன்றும் நோபல் உலகச் சாதனையாகப் போற்றப்படுகிறது. ஐக்கிய நாடுகள் சபையில், பெண்கள் சுகாதாரம் பற்றி இவர் ஆற்றிய உரை தமிழின் குரலாக ஒலித்தது.

"மாநிலமெங்கும் முழங்கிய இவரது பெயர் FOGSI அங்கீகாரம், தமிழ்மகள் விருது, டெல்லி ஹைஜனி அவார்டு என இவரது பயணத்தை நூற்றுக்கும் மேற்பட்ட விருதுகள் மரியாதை செய்திருக்கின்றன. இவர் அறிமுகம் செய்த “ஆயிரத்தில் ஒருத்தி” திட்டம் மூலம் 10,000க்கும் அதிகமான கிராமப்புறப் பெண்கள் வணிகம் நடத்தி வருமானம் ஈட்டுகின்றனர். "ஆனந்த சஞ்சீவனம்” என்னும் அறக்கட்டளை மூலமாக மனிதன் பொருளாதரத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டு வாழக் கூடாது. அருளாதாரம் என்பதும் அவசியம் என்ற விழிப்புணர்வைச் சமுதாயத்தில் ஏற்படுத்தி வருகிறார். மேலும் கிராமப்புறப் பெண்களுக்கு வணிகமும் வாழ்க்கையும் கற்றுத் தரும் வளர்ச்சி மையமாக AS Foundation –ஐ உலகம் முழுவதும்

விரிவுபடுத்த முயற்சி செய்து வருகிறார். இது சாதாரண ஒரு பெண்ணின் வெற்றிப் பயணம் அல்ல..

பல சாதனையாளர்களை உருவாக்கும் வெற்றிச் சரித்திரம். பெண் சமுதாயத்திற்கு இவர் ஒரு விடிவெள்ளியாகத் திகழ்கிறார்.

# பூவையர் பொக்கிஷம்

## மாதேஸ்வரி ராஜ்குமார்

சாதனைப் பெண்மணி திருமதி, மாதேஸ்வரி ராஜ்குமார்: ஒரு முன்மாதிரிப் பயணம்

ஈரோடு மாநகரில் திரு. மாரிமுத்து கவுண்டர் -திருமதி உன்னம்மாள் இணையரின் மகளாகப் பிறந்த திருமதி மாதேஸ்வரி ராஜ்குமார் அவர்கள், அவிநாசியைச் சேர்ந்த திரு. ராஜ்குமார் (திரு. பழனிச்சாமி கவுண்டர் - திருமதி சின்னம்மாள் அவர்களின் புதல்வர்) அவர்களைத் மணம் முடித்து அவிநாசியில் குடியேறினார்.

சிறு வயது முதலே ஆசிரியர் ஆக வேண்டும் என்ற தனது லட்சியத்தை அடைய உறுதியுடன் செயல்பட்டவர், 2000-ஆம் ஆண்டு வேதாத்திரி மகரிஷியின் மனவளக்கலை மன்றத்தில் இணைந்தார். ஆழியாரில் முறையான பயிற்சிகளைப் பெற்று, மகரிஷியிடம் தீட்சை பெற்று ஆசிரியர் பயிற்சியை நிறைவு செய்தார். செய்தார். அவிநாசி மனவளக்கலை மன்றத்தைத் தொடங்கி, பலருக்குத் தீட்சை வழங்கும் ஆசிரியராகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

கல்வித் துறையில் தனது கனவை நனவாக்க, 2006-ல் அவிநாசியின் முதல் மழலையர் விளையாட்டுப் பள்ளியான 'குட்டீஸ் பிளே ஸ்கூல்'-ஐத் தொடங்கினார். அதன் தொடர்ச்சியாக 2010-ல் 'பழனியப்பா மெட்ரிக் பள்ளியை நிறுவி, இன்று அது 1000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிலும் 'பழனியப்பா இன்டர்நேஷனல் பள்ளியாகப் பெரும் வளர்ச்சி பெற்றுள்ளது.

மேலும், தனது புதல்வர்களான டாக்டர் பிரகாஷ் (MD) மற்றும் டாக்டர் சதீஷ்குமார் (MS) ஆகியோரைச் சிறந்த மருத்துவர்களாக உருவாக்கி, அவர்களின் சேவையை விரிவுபடுத்த 'மாதேஸ்வரி மெடிக்கல் சென்டர் & ஹாஸ்பிடல்' (50 படுக்கை வசதிகள் கொண்டது) என்ற மருத்துவமனையைச் செயலாளராகச் சிறப்பாக வழிநடத்தி வருகிறார். இவரது தன்னலமற்ற சேவையைப் பாராட்டி இவருக்கு 'பூவையர் பொக்கிஷம்' என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.



# "பசுமை வணிகம்"

## பத்மபிரியா

பசுமையை முன்னிறுத்தும் தொழில்முனைவோர் பத்மபிரியா

திருப்பூர் மாவட்டம் அவிநாசியைச் சேர்ந்த பத்மபிரியா, சுற்றுச்சூழல் பாதுகாப்பை முன்னிறுத்தும் Eco-Friendly Corporate Gifting தயாரிப்புகளில் சிறந்து விளங்கும் தொழில்முனைவோர். "Reign Green" என்ற நிறுவனத்தின் மூலம், நிறுவனங்களுக்கு சுற்றுச்சூழலுக்கு உகந்த பரிசுப் பொருட்களை தயாரித்து வழங்கி வருகிறார்.

Reign Green நிறுவனத்தில் விதை காகிதப் பொருட்கள், மறுசுழற்சி செய்யப்பட்ட ஸ்டேஷனரி பொருட்கள், மூங்கில் பேனா, மீண்டும் பயன்படுத்தக்கூடிய கோப்புறைகள், சூழல் நட்பு திட்டப்புத்தகங்கள் (planners), மற்றும் நிறுவன மாநாடுகளுக்கான Eco-friendly Conference Kits போன்ற பல்வேறு தயாரிப்புகள் உருவாக்கப்படுகின்றன. இவை அனைத்தும் பிளாஸ்டிக் பயன்பாட்டை குறைத்து, இயற்கைக்கு உகந்த மாற்று வழிகளை நிறுவனங்களுக்கு வழங்கும் நோக்கத்துடன் தயாரிக்கப்படுகின்றன.

மேலும், வாடிக்கையாளர்களின் ஆதரவுடன் இதுவரை 3.5 கோடியுக்கும் மேற்பட்ட Seedballs (விதை உருண்டைகள்) நாட்டும் முயற்சியை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளனர். இந்த பசுமை முயற்சி பத்மபிரியாவுக்கும் அவரது நிறுவனத்திற்கும் பெருமையான சாதனையாகும்.

அதே நேரத்தில், இந்த முயற்சியின் மூலம் 40 குடும்பங்கள் இணைந்து வேலை செய்து வாழ்க்கையை முன்னேற்றி வருகின்றனர். இது ஒரு தொழில்முனைவுத் திட்டமாக மட்டும் இல்லாமல், பல குடும்பங்களின் வாழ்வாதாரத்தையும் ஆதரிக்கும் சமூக முயற்சியாகவும் வளர்ந்து வருகிறது.

பத்மபிரியா, ராம் அவர்களின் துணைவியராக குடும்ப பொறுப்புகளுடன் தொழிலையும் சிறப்பாக முன்னெடுத்து வருகிறார். நிறுவனங்கள் தங்கள் பிராண்டிங்கை சுற்றுச்சூழல் பொறுப்புடன் இணைக்க வேண்டும் என்ற நோக்கத்தில், தனிப்பயன் (customized) eco-friendly gifting தீர்வுகளை வழங்குவது அவரது முக்கிய இலக்காகும்.

"சிறிய மாற்றங்களே பெரிய சுற்றுச்சூழல் மாற்றத்தை உருவாக்கும்" என்ற நம்பிக்கையுடன், பசுமையான பரிசுப் பொருட்களின் பயன்பாட்டை அதிகரிக்க வேண்டும் என்பதே பத்மபிரியாவின் கனவு. அவரது Reign Green நிறுவனம், பசுமை மற்றும் பொறுப்புணர்வு கொண்ட வணிகத்தின் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக வளர்ந்து வருகிறது.



# “நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை”

## விஜயலட்சுமி சண்முகம்



பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய் நிமிர்ந்த நடை , நேர்கொண்ட பார்வை, இடி போன்ற பேச்சு, நேர்மை ,துணிவு, அன்பு இதற்கு உதாரணமானவர் திருப்பூர் பல்லடம் விஜயலட்சுமி சண்முகம் பிறந்தது ஒரு சிறு விவசாய குடும்பம்.

பத்தாம் வகுப்பக்கு பின் விசைத்தறித் தொழிலில் ஈடுபட்டு இன்று விஜி டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளர்.

விளையாட்டில் உள்ள ஆர்வம் இவரை மாவட்ட மாநில அளவில் தனது 53 வயதிலும் மூத்தோர் தடகளப் போட்டிகளில் பங்கேற்று மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் பல பரிசுகளை பதக்கங்களை பெற்று வருகிறார்.

இயற்கை மேல் உள்ள காதலால் சிறு வயது முதலே இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் ரோடு பயணித்தவர். இயற்கை வேளாண் விஞ்ஞானி சுபாஷ்பலேத்கரின் மாணவி. இயற்கை விவசாயம் செய்பவர் அதை மற்றவர்களுக்கும் ஊக்கப்படுத்துபவர்.

பல்லடத்தை பசுமையாக்கும் திட்டத்தை கையில் எடுத்து அதை நிறைவேற்றிக் கொண்டு இருக்கும் பல்லடம் வனம் இந்தியா பவுண்டேஷனில் பெண்கள் துறையில் இயக்குனராக பணியாற்றி வருகிறார்.

ஆண்கள் மட்டுமே ஆடிய வள்ளி கும்மி ஆட்டத்தை, 2009 இல் கருமத்தம்பட்டியில் ஆரம்பித்து இன்று 18 ஆயிரம் பெண்கள் ஆடிய கின்னஸ் சாதனை புரிந்ததற்கு முக்கிய காரணமாக இருந்தவர்.

கொங்கு நாட்டில் நடக்கும் விவசாயம் விசைத்தறி பனியன் தொழில் என்று தொழில் மேம்பாட்டுக்காக பல போராட்டக் களங்களை சந்தித்தவர். அஞ்சுவதும் கெஞ்சுவதும் அடிபணிந்து போவதும் தான் பெண்கள் வாழ்வு அல்ல படிப்பே பெண்களுக்கு ஆபரணம் என்று நூற்றுக்கணக்கான தடம் மாறியபெண்கள் வாழ்வில் கவுன்சிலிங் கொடுத்து அவர்களின் வாழ்க்கையை வெற்றிப்பாதையாக மாற்றியவர். சிறந்த மேடைப் பேச்சாளர்.

கொரோனா காலகட்டத்தில் பல பேருக்கு உதவி புரிந்தவர். சிறந்த சமூக சேவகர் படிக்க வயது தடை இல்லை என்று படிப்பின் மேல் உள்ள ஆர்வத்தால் தன் 45 வயதில் அஸ்ட்ராலஜியல் பல டிகிரி முடித்து அதில் சிறந்த ஆலோசகராகவும் உள்ளார்.

# ஐஸ்வர்யா பெர்டிலிட்டி சென்டர் முகப்பேர் 80-வது கிளை திறப்பு விழா




ஐஸ்வர்யா பெர்டிலிட்டி சென்டர் 80வது கிளை முகப்பபேரில் 21 மார்ச் அன்று டாக்டர் ஆர். சந்திரலேகா முன்னிலையில் திறந்து வைக்கப்பட்டது. இதில் முன்னாள் செயலாளர், முன்னாள் தலைவர், முன்னாள் பொருளாளர், சங்கத்தின் இனைச் செயலாளர்,செயற்குழு உறுப்பினர் மற்றும் கொங்கு சொந்தங்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# உறவுகள் சார்ந்த தகவல்கள்

## கொங்கு மாமணி முனைவர் மணிமேகலை புஷ்பராஜ்

கொங்கு மண்ணின் இயற்கை தாய்மடியாம் கொல்லிமலை அதன் அடியொற்றிய சிவியாம்பாளையம் என்னும் சீர்மிகு சிற்றூரில் பிறந்தவர் முனைவர் மணிமேகலை புஷ்பராஜ் அவர்கள் தமிழகத்தின் பட்டிதொட்டியெங்கும் சிலப்பதிகாரத்தின் மாண்பை மண்ணோடும் மக்களின் மனங்களோடு எழுதிய “தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பன் செல்லம்மாள்" இணையரின் மூத்த மகளே முனைவர் மணிமேகலை புஷ்பராஜ் அவர்கள். கொல்லிமலையோரம் பிறந்தவர் தகடூர் கோட்டையில் தனது திருமண வாழ்வைத் தொடங்கி னார். பாப்பிரெட்டிப்பட்டியின் நிலக்கிழாரான நாராயணசாமி கவுண்டர் – பாப்பாயி இணை யரின் மகனான பொறியாளர். புஷ்பராஜ் அவர்களை 1976 ஆம் ஆண்டு திருமணம் செய்துகொண்டார்.



திருமணத்திற்கு பின்னர் M.A ( தமிழ் ) பட்டம் பெற்றார், அதன்பின் "கொங்கு வேளாளர்கள் திருமணச் சடங்குகள்" என்ற தலைப்பில் முனைவர் பட்ட ஆராய்ச்சி செய்து, Ph.D பட்டம் பெற்றார்.இன்றுவரை அயராது தமிழ்ப்பணி, சமுதாயப்பணி என பல்வேறு முன்னெடுப்புகளில் பயணித்துக் கொண்டுள்ளார்.

தீரன் சின்னமலை பற்றி பல்வேறு புத்தகங்களை எழுதி உள்ளார். மேலும் தமிழ் பணிக்காக பாரதிதாசன் விருது போன்ற பல்வேறு விருதுகளையும் பெற்றுள்ளார்

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் 50 ஆண்டுகால வரலாற்றை தனது கணவர் புஷ்பராஜ் மற்றும் பலருடன் இணைந்து ஆய்வு செய்து அதனைப் புத்தகமாகக் கொண்டுவந்தார். தருமபுரி மாவட்ட கொங்கு வேளாளர்களின் வரலாற்றை வெளிச்சமிடும் இவரின் படைப்பே தருமபுரி மாவட்டத்தில் கொங்கு வேளாளர்" புத்தகம். இப்புத்தகத்தில் தருமபுரி மாவட்டத்தின் கொங்கு வேளாளர்களின் திருமண முறைகள் பற்றி மிக விரிவாக ஆய்வு செய்துள்ளார். அங்கு திருமணங்கள் கள் பெரும்பாலும் உறவின் முறையிலேயே மாமன், மைத்துனர், பங்காளிகள் என் சுழன்றதால் குலத்தைப் பற்றிய பேச்சும் தெளிவும் இடைப்பட்ட காலங்களில் இல்லாமல் இருந்தது என்பதை அடிக்கோடிட்டார். பகுத்தறிவுப் பண்புகளில் தினயே சிறந்து விளங்கும் தருமபுரி மாவட்ட கொங்கு வேளாளர்களிடம் சடங்குகள், குலம், கோவில்கள் பற்றிய செய்திகளை கொண்டு சேர்க்க ஆய்வினை நூலாக வெளியிட்டவர் என்பது பெருமைக்குரியது. ஊர் அளவில் தலைவராக இருந்தவரை 'ஊர்க்கவுண்டர்" என்றும், பல ஊர்களைக் கொண்ட நாட்டுக்குத் தலைமை வகித்த வரை நாட்டுக் கவுண்டர்" எனவும் குறிப்பிடுவது வழக்கமாக இருந்தது. ஒவ்வொரு குலத்தின் காணியூர்கள், ஒவ்வோர் ஊரின் காவல் கோவில் தெய்வங்களை யும் அறிய இவரின் படைப்புகள் பெரும் துணையாக உள்ளது.வடகத்தி கவுண்டர்கள், தெற்கத்திய கவுண்டர்கள் இடையே திருமண உறவுகள் நடைபெறவாயின. இம்முறையிலும் கணவர் மனைவி இருவரும் வெவ்வேறு குலத்தைச் சேர்ந்தவர்களாகவே உள்ளனர். இதன் மூலம் குலம் அறிதல் அவசியமாகிறது.

சுற்றம் தழுவுதலும், விருந்தோம்பலும், பெரியோரை மதித்தலும், இல்லாதர்கட்கு இயன்ற வரை அளவோடு அளித்தாலும், எக்காலத்திலும் ஒருவருக்கொருவர் உற்றுழி உற்றுழி உதவுவதும் தருமபுரி மாவட்ட கொங்கு வேளாளர்கள் ளர்கள் பண்பாட்டுக் கூறுகளில் குறிப்பிடத்தக்கனவாகும்.

தருமபுரி மாவட்ட கொங்கு வேளாளர்கள் உறவுகள் சார்ந்த இன்னும் பல்வேறு தகவல்களை முனைவர் மணிமேகலை புஷ்பராஜ் அவர்களின் படைப்புகளின் வாயிலாக நாம் அறிந்து மகிழ்ச்சியடையலாம்.

அவர் பணி சிறக்கட்டும்! அவர்தம் புகழ் நிலைக்கட்டும்!!

# மின்குறை தீர்ப்பாளர்

## இந்திராணி



தமிழகத்தில் மின்சார பிரச்சனை தொடர்பாக நுகர்வோரின் மேல்முறையீட்டு மனுவை விசாரித்து தீர்வு காணும் மின் குறை தீர்ப்பாளர் பதவியில் ஈரோட்டை சேர்ந்த திருமதி இந்திராணி அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த பதவியில் நியமிக்கப்படும் முதல் பெண் அதிகாரி இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழக மின் வாரியம், 45 மின் பகிர்மான வட்டங்க ளாக செயல்படுகிறது. ஒவ் வொன்றிலும் தலா ஒரு மின் நுகர்வோர் குறைதீர் மன்றம் உள்ளது. மின் வாரிய மேற்பார்வை பொறியாளர் தலைமையில் செயல்படும் மன்றத்தில், மின் தடை, அதிக மின் கட்டணம், மின்னழுத்தம், குறைபாடு உடைய மீட்டர் உள்ளிட்ட பிரச்னைகளால் பாதிக்கப்படுவோர். புகார் அளிக்கலாம்

அங்கு அளிக்கப் படும் தீர்ப்பை ஏற்க விரும்பாத புகார்தாரர், மின்சார ஒழுங்குமுறை ஆணை யத்தில் உள்ள குறை தீர்ப்பாளரி டம் மேல்முறையீடு செய்யலாம்.

இரு தரப்பை விசாரித்து, மின் வாரியம் மீது தவறு இருப்பது உறுதி செய்யப் பட்டால் இழப்பீடு வழங்க, குறை தீர்ப்பாளர் உத்தரவிடுவார். மின் தொடரமைப்புக் கழக மேலாண்மை இயக்குனராக செவ்வனே பணிபுரிந்து பணி நிறைவு பெற்ற இவர், தற்பொழுது வகிக்கும் மின் குறை தீர்ப்பாளர் பதவியில் சிறந்த முறையில் பணியாற்றிட வாழ்த்துகிறோம்.

# கொங்கு அருமைப்பெரியவர்கள் நல அறக்கட்டளை



01.03.2026 ம் தேதி திருச்செங்கோடு கொங்கு வேளாளக்கவுண்டர் சமூக கூடத்தில் கொங்குநாடு அறக்கட்டளையின் தலைவர் திரு.அப்பாவு அய்யா அவர்கள் தலைமையில், கொங்குகுரல் திரு. சின்னுசாமி அவர்கள் முன்னிலையில் கொங்கு அருமைப்பெரியவர்கள் சங்கமம் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. ஈரோடு, சேலம், நாமக்கல், கரூர் மாவட்ட அருமைப்பெரியவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள் கூட்டத்தில் அருமைப்பெரியவர்களுக்கு தனியாக அறக்கட்டளை ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டது.தலைவர், செயலாளர், பொருளாளர், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டார்கள். அறக்கட்டளை பதிவு செய்ய தலைவருக்கு அனுமதி தரப்பட்டது. தமிழக சட்டமன்ற தேர்தல் முடிந்தவுடன் கொங்கு அருமைப்பெரியவர்கள் நல அறக்கட்டளையின் நிர்வாகிகள் பதவி ஏற்கின்ற விழாவும் அருமைப்பெரியவர்கள் குடும்ப விழாவும் பிரம்மாண்டமாக நடத்த முடிவு செய்யப்பட்டது. புதியதோர் உலகம் செய்வோம் வாருங்கள்.

# "குதிரையேற்றத்தில் முன்னேற்றம்"

## செல்வி நியந்த்ரா கார்த்திக்

செல்வி நியந்த்ரா கார்த்திக் அவர்கள் தனது பள்ளிப் படிப்பை வித்யா மந்திரி பள்ளியில் முதன்மை மாணவியாக சிறப்பாக நிறைவு செய்தார். பள்ளியில் அவருக்கு அளிக்கப்பட்ட விருதுகள் பின் வருமாறு:-

R.M.Sundaram ICS விருது

Pattammal Gopal Iyyer விருது

S.Padmanaban Price

Business Studiesயில் AISSCEயில் முதன்மையாக வெற்றி பெற்றதற்கு அளிக்கப்பட்ட விருதுகள்.

பின்னர் மவுண்ட் கார்மயில், பெங்களூரில் தனது பட்டப்படிப்பை தொடர்ந்த அவர், கல்வி மற்றும் பல்துறை செயல்பாடுகளில் சிறந்து விளங்கி All Rounder அவார்டை பெற்றது குறிப்பிடத்தக்கது.

குதிரை சவாரி அவரது மிகுந்த ஆர்வமும், திறமையும் கொண்ட துறையாகும். தனது 6 வயதிலிருந்து இந்த துறையில் உள்ள அவர் தேசிய அளவிற்கு முன்னேறி சாதனையை பெற்றுள்ளார். இந்தியாவின் சார்பாக ஈரான் நாட்டிற்கு அழைக்கப்பட்டார்.

தற்போது இவர் இங்கிலாந்து உள்ள Derham Universityயில் முதுகலைப் படிப்பை பயின்று வருகிறார். இவரது கல்வித்திட்டம் (Project) தேர்வு செய்யப்பட்டதின் பேரில் அதை சமர்ப்பிக்க சீனாவின் Zhejiang University, International Business School (ZIBS) வழங்கும் Global Consulting Projectற்காக April 2026யில் China செல்கிறார்.

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என்நோற்றான் சொல் எனுஞ் சொல்

என்பதற்கு ஏற்ப வளரும் அவரை வாழ்த்துகிறோம். வாழ்த்த வேண்டுகிறோம்.

இவர் கொங்குவின் இளம் சாதனையாளர் விருதும், கொங்கு அறக்கட்டளையினால் கௌரவிக்கப்பட்டவர் ஆவார்.

# போல்வால்ட் விளையாட்டில் வெள்ளி

## திருமதி.யுவராணி



சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணியாற்றும் நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையத்தை சொந்த ஊராகக் கொண்ட வரும், ஆந்தை குலத்தை சேர்ந்தவருமான திரு. அருள் முருகானந்தம் அவர்களின் மனைவி திருமதி.யுவராணி அவர்கள் நாமக்கல் மாவட்டம் விலாங்காட்டூர் தேவேந்திர குலத்தை சேர்ந்த திரு. பெருமாள்-திருமதி.அம்சவல்லி அவர்களுக்கு மகளாக பிறந்தவர்.

தற்போது சென்னை முகப்பேரில் வசிக்கிறார். மோகன், வசந்தன் ஆகிய இருவருக்கு தாயான இவர் தனது 42 ஆம் வயதில் ஆசிய மாஸ்டர்ஸ் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்று போல்வால்ட் (Pole Vault) விளையாட்டில் வெள்ளி பதக்கத்தை வென்றிருப்பது பெருமைக்குரிய செய்தியாகும்.

# ஆலைக் கழிவில் மின்சாரம்... அசத்தும் பெண்மணி

## டாக்டர் பிரியாமணி



திருச்செங்கோட்டிற்கும் தண்ணீருக்கும் மிகுந்த நெருக்கம் உண்டு. உலகெங்கும் போர்வெல் மூலம் நீரை வெளிக் கொணரும் தொழிலில் சாதனை படைத்து கொண்டுள்ளது.

திருச்செங்கோட்டில் பிறந்து லண்டனில் Phd பட்டம் பெற்ற பிரியா மணிக்கும் தண்ணீருக்கும் வேறு விதமான தொடர்பு உண்டு. JSP Enviro என்ற நிறுவனத்தை தொடங்கி, தொழிற்சாலை கழிவில் உள்ள சாயம், வேதிப் பொருட்கள், நச்சுப் பொருட்கள் போன்றவற்றை பேக்டீரியா மூலம் நீக்குவது மட்டுமின்றி, அவை மூலம் மின்சாரம் உற்பத்தி செய்து, தொழில் சாலைகளுக்கு இரட்டை லாபம் கிடைக்கும்படி செய்து வருகிறார்.

திருச்செங்கோட்டில் லேட் K.S.மணி-திருமதி பரமேஸ்வரி தம்பதிக்கு மகளாகப் பிறந்து, கோவையில் BE (Biotech) பயின்ற பிறகு இங்கிலாந்தில் MS மற்றும் PhD ஆராய்ச்சிப் படிப்பை சுற்று சூழல் அறிவியலில், குறிப்பாக தொழிற்கழிவில் மின்சாரம் தயாரிப்பதில் சிறப்பு கவனம் செலுத்தினார். ஆராய்ச்சி முடிவுகளை உலகத்தரம் வாய்ந்த அறிவியல் பத்திரிக்கைகளில் பதிப்பித்தது மட்டுமின்றி, அவை நேரடியாகப் பயன்பட வேண்டும் என்ற நோக்கில் சென்னை IIT மையத்தில் மேலும் ஆராய்ச்சி செய்து அவற்றுக்கு காப்புரிமை (Patent) பெற்றுள்ளார்.

பெருந்துறை சிப்காட்டில் மாதிரி பரிசோதனை (Pilot Plant) வெற்றிகரமாக முடித்து தற்போது பன்னாட்டு நிறுவனம் மற்றும் உள்நாட்டு மருந்து, உணவு, தோல் பயன்படுத்துதல் மற்றும் சாயக் கழிவுகளை நீக்குவதற்காக JSP Enviro நிறுவனத்தின் மூலம் இந்த நூதன தொழில் நுட்பத்தை நேரடியாக பயன்படுத்த ஆரம்பித்துள்ளனரர்.

Dr.பிரியாவின் நவீன கண்டுபிடிப்பிற்காக Scotland-Edin burgh நகரில் நடைபெற்ற climate Launchpad Global Challenge போட்டியில் உலக அளவில் 2nd Prize பெற்றுள்ளார்.

2020 தமிழ்நாடு Bionest போட்டியில் சிறந்த போட்டியாளர் பரிசு, Economic Times 2021-ல் Enterpreneur in IIT Madras Deep Tech Start-up பற்றிய சிறப்பு செய்தி, Biotech Expo 2022-தலைசிறந்த 25 பெண் தொழில் முனைவோர் பட்டியலில் இடம் பெற்று இந்திய அறிவியல் தொழில் நுட்ப அமைச்சரால் பாராட்டு பத்திரம் போன்ற எண்ணற்ற விருது மற்றும் பாராட்டுகளை பெற்று கொங்கு சமூகத்தில் பேர் சொல்லும் சாதனையாளராக Dr.பிரியா தன் பயணத்தை சொந்த சாதனையாக கருதாமல் சமூக நலனுக்காகவும், மக்கள் உடல் நலத்தை மேம்படுத்தவும் விடா முயற்சியில் JSP Enviro நிறுவனம் மூலம் ஈடுபட்டுள்ளார்.



# ஏப்ரல் 17-ல்

## விடுதலைப் போராட்ட வீரர்

# தீரன் சின்னமலை

அவர்களின்

## 270-வது

# பிறந்த நாள் விழா

நாட்டின் சுதந்திரத்திற்காக வீரத்துடன் போராடிய மகத்தான தலைவரை நினைவுகூர்ந்து "நினைவு கூர்ந்து கிண்டியில் உள்ள அவரது சிலைக்கு மாலை அணிவிக்கும்" இந்நிகழ்ச்சியில் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

## மேலாளர் தேவை!

**பாரம்பரியம் மிக்க நமது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தில் பணிபுரிய மேலாளர் தேவை.**

*தகுதி: பட்டப்படிப்பு

*அனுபவம்: 2 வருடம்

*தங்கும் வசதி உண்டு

தொடர்புக்கு

office: chennaikongu@gmail.com & whatsapp No: 63839 85919

செயலாளர்: 94440 60885

# மணமகன் தேவை

| | |
|---|---|
| ஜாதகர் பெயர் | : R.Ramya |
| பிறந்த தேதி | : 11.02.1993 |
| பிறந்த நேரம், இடம் | : 07.09 A.M., ஈரோடு |
| நட்சத்திரம்/இராசி | : சித்திரை, பாதம்–I, கன்னி |
| தந்தை பெயர் | : R.Rathinavel |
| தாயார் பெயர் | : R.Shanmuga vadivu |
| குலம் | : விழியன் |
| உடன் பிறந்தோர் | : தங்கை1 |
| உயரம் | : 160CM |
| படிப்பு | : B.E.,EEE |
| தொழில் | : IT, Software |
| மாத வருமானம் | : Rs.2,00,000 Monthly |
| சொத்து மதிப்பு | : நேரில் |
| உகந்த மணமகன் | : IT, Business, Professional work |
| ஜாதக குறிப்பு | : சுத்த ஜாதகம் |
| தொடர்புக்கு | : 99520 92347, 98650 92150 |



| | | | |
|---|---|---|---|
| சுக் | | கேது | செவ் |
| புத லக் | ராசி கன்னி | | |
| சூ சனி | | | |
| | ராகு | | சந் குரு |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| செவ் ராகு | நவாம்சம் | | குரு |
| புத | | | சந் கேது |
| | சுக் | | சூ சனி |

## மணமகள் தேவை

| எண் | பெயர் | கூட்டம் | பிறந்த தேதி, நட்சத்திரம் | கல்வி | தொழில் | பிறந்த இடம், நேரம் | தொடர்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 178 | S.தருண் | கண்ணன் | 16.12.1999 உத்திரட்டாதி | B.Tech, M.B.A., | HCL (IT) Senior Executive | சேலம் 10.20 P.M. | 94438 93502 72991 07755 |
| 179. | G.பிரகாஷ் | பண்ணை | 31.10.1990 பூரட்டாதி | B.E., | Private Sector | Salem 2.58 A.M. | 89391 25584 76673 19999 |
| 180 | J.S.Sandeep Kiran | காடை | 22.12.1998 திருவோணம் | B.Tech | Software Engineer | Erode 11.29 P.M. | 99401 93906 94448 16368 |
| 181 | K.N.தீபக் | செம்பூத்தான் | 26.03.1998 | M.Com | Us Auditing | Salem 10.14 P.M. | 90472 22755 91593 51818 |
| 182 | G.கௌதம் | காடை | 04.04.1989 பூரட்டாதி | BE (CS) | Own busines (Karur) | Karur 10.00 P.M. | 9994470007 9994470008 |
| 183. | M.கிஷோர் | தூரன் | 09.04.2000 மிருகசீரிடம் | B.E. (EEE) | Software (Chennai) | Karur 1.35 P.M. | 78459 89757 94448 38755 |
| 179 | Naveen | காடை | 29.06.1996 அனுஷம் | B.E.(CSE) | Own Business (Sri priya Scientific &co) | Erode 07.21 A.M. | 8608082462 98403 33668 |

## மணமகன் தேவை

| எண் | பெயர் | கூட்டம் | பிறந்த தேதி, நட்சத்திரம் | கல்வி | தொழில் | பிறந்த இடம், நேரம் | தொடர்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 211. | R.ரம்பா | விழியன் | 11.02.1993 சித்திரை | B.E., EEE | IT, Software | Erode 07.09 A.M. | 99520 92347 98650 92150 |
| 212. | N.காவியா | கண்ணந்தை | 28.07.1999 திருவோணம் | MBBS., MDS | Doctor | Chennai 06.13 P.M. | 9444398258 |
| 213. | V.Swarupa | பெரிய | 29.03.2001 கிருத்திகை | B.Tech | Senior Software Engineer | Gobi 5.54 A.M. | 98801 22288 82771 25470 |
| 214. | S.Srisakthi | ஆதி | 09.01.2003 உத்திரட்டாதி | B.Com., MBA | Studing | பவானி (Bhavani) 03.35 A.M. | 90945 81982 98414 03248 |
| 215. | K.B.Sarulatha | செங்கண்ணன் | 02.04.2003 ரேவதி | MCA | Teacher (Karur) | Karur 7.19 A.M. | 99406 58943 99423 58028 |



சென்னை மெட்டெக்ஸ் லேப் பிரைவேட் லிமிடெட்
CHENNAI METTEX LAB PRIVATE LIMITED®
Where Test Inspires Trust
Mettex
Since 1984
Accreditations | Approvals :
ISO 17025 : 2017
NABL TC - 5589
TC-5589
BIS
(Bureau of Indian Standards)
fssai
FSSAI
(Food Safety and Standards Authority of India)
CPCB
MoEF
(Ministry of Environment, Forest and Climate change)
Gafta
OUR SERVICES
CHEMICAL
Metals & Non Metals, Spectro & Wet Analysis, Salt Spray Test, ROHS, Polymer Identification etc.,
MECHANICAL
Tensile, Yield Strength, Elongation, Hardness, Micro/Macro Structure, Vickers Hardness Impact Test, Rubber Test etc.,
BIOLOGICAL
Food & Agricultural products, Water & PDW, Marine / Aquaculture Products, Animal Food & Feed, Nutritional Supplements, IAQ & Swabs etc.,
ENVIRONMENTAL
AAQ Monitoring, IAQ/Fugitive Monitoring, Stack Emission, Noise Level , Effluent & Sewage Water Analysis etc.,
FOOD
Nutrition Label, Shelf Life, Cooked Food, Fruits, Agri, Dairy, Animal Products, Flavours, Pesticides, Meat, Fish & Egg Products etc.,
WATER
Drinking & Packaged Drinking Water, Raw water, Well & Bore well Water, RO & DM Water, Industrial Water, Waste Water, ETP & STP Water etc.,
❖ மஞ்சள் கிழங்கில் குர்க்குமின், நிலக்கடலை, வெங்காயம், கறிவேப்பிலை, முருங்கைக்கீரை போன்ற வேளாண் விளை பொருட்களையும் மற்றும் மீன், இறால் இறைச்சி போன்ற உணவுப் பொருட்களையும் ஏற்றுமதி செய்வோருக்குத் தேவையான ஆய்வுகள் செய்து சான்றிதழ் வழங்க APEDA, EIC, FSSAI, AGMARK போன்ற அரசு அமைப்புகளின் அனுமதியும் இங்கிலாந்து (UK) நாட்டின் GAFTA அமைப்பின் அத்தாட்சியும் பெற்ற ஆய்வுக்கூடம்.
❖ குடிநீர் ஆய்வு IS:10500, IS:14543-ன் படியும் கால்நடை தீவன ஆய்விற்கும் BIS அங்கீகாரம் பெற்ற ஆய்வுக்கூடம்.
❖ ஆட்டோமொபைல், இன்ஜினியரிங் தொழிலுக்கு தேவையான உலோக, அலோகப் பகுப்பாய்வுகள் இயந்திரவியல் சோதனைகள் செய்து சான்றளிப்பதில் 41 ஆண்டுகளாக முத்திரை பதித்த NABL அங்கீகாரம்பெற்ற ஆய்வுக்கூடம்.
❖ MoEF அங்கீகாரம் பெற்ற சுற்றுச்சூழல் ஆய்வுக்கூடம்.
CHEMICAL TESTING
MECHANICAL TESTING
BIOLOGICAL TESTING
ENVIRONMENTAL TESTING
SCAN FOR OUR NABL SCOPE
SCAN HERE TO CONTACT US
பதிவு அலுவலகம் & மைய ஆய்வகம் :
83, ஜோதி வளாகம், எம்.கே.என்.சாலை, கிண்டி,
சென்னை - 600 032. +91 44 2232 3163, 4217 9490
Mob : 98410 78949, 98411 37087
கிளை ஆய்வகங்கள் :
101, பாரதியார் சாலை, திரு.வி.க.தொழிற்பேட்டை,
ஈக்காட்டுத்தாங்கல், சென்னை - 600 097. (TC-17166)
5/1, ஈடிசியா வளாகம், சென்னிமலை சாலை,
ஈரோடு - 638 001. Ph :0424 - 2272282
Mob : +91 9952949222, 89398 72544 (TC-14172)
7-109, ஜவ்வலப்பாலம் சாலை, பீமாவரம் -534204
ஆந்திரப்பிரதேசம். Ph :08816-246784 (TC-16433)
கிளை அலுவலகங்கள் :
மும்பை - +91 89398 72540
பாண்டிச்சேரி - +91 95512 50027
பெங்களூரு - +91 89399 90282
கோயம்புத்தூர் - +91 98410 53041
மாதிரி சேகரிக்கும் மையங்கள் :
குன்னூர் - +91 89398 72544, 89399 98324
தூத்துக்குடி - +919941131882
நாமக்கல் - +91 8939856450
நெல்லூர் - +91 9000614411
விசாகப்பட்டிணம் - +91 9030906630
காக்கிநாடா - +91 8978086356
ஆயுஷ் அமைச்சகம் அங்கீகாரம் பெற்ற சித்தா, ஆயுர்வேத மருந்து பரிசோதனைக் கூடம்
www.mettexlab.com
test@mettexlab.com

**REGD. NEWS PAPER /** Posted on **01.04.2026**
Posted at Egmore RMS/1 (Pattrika Chennai) | CHENNAI KONGU NANBARGAL MALAR / சென்னை கொங்கு நண்பர்கள் மலர்
Registration Number of the Newspaper: TNTAM/2016/69320 | Postal Reg No. TN/CH(C)/602/2025-2027
Date of Publication Second Week of every month




அனுப்புதல்
சென்னை கொங்கு நண்பர்கள் மலர்
கொங்கு நண்பர்கள் சங்கம்
வெள்ளி விழா இல்லம்
எண்.34, சீனிவாசப் பெருமாள் சன்னதி
முதல் தெரு, இராயப்பேட்டை,
சென்னை- 600 014.

பெறுநர்